# "நிபந்தனையற்ற விதத்தில் இந்தியப் படை வாபஸ் பெற்றது ஒரு முக்கிய அம்சமாகும்"

விலை ரூபா 3-00

# ஈழநாடு
THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 13 ஷஃபான் பிறை: 28 இதழ்: 42
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-03-1990

## - ஜனாதிபதி

(ஹட்டன்)
நிபந்தனையற்ற விதத்தில், இந்திய அமைதிப்படை வாடஸ் பெற்றது ஒரு முக்கிய அம்சமாகும்'.

நேற்று ஹட்டனில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொன் விழாக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி தி,. ஆர் பிரேமதாஸா உரை நிகழ்த்திய போது மேற்கண்டவாறு கூறினர்.

(8ம் பக்கம் பார்க்க)

புலிகள் - அரசு

## பேச்சுவார்த்தை நல்ல பலன்களைத் தந்துள்ளன

— தொண்டமான்

[ஹட்டன்]
''தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பயனாக நல்ல பலன்கள் கிட்டியுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியத் தொழிற்துறை அமைச்சருமான திரு.எஸ்.தொண்டமான், நேற்று ஹட்டனில் நடைபெற்ற இ. தொ. கா. வின் பொன்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு இதன் மூலம் நியாயமான தீர்வு கிடைக்குமென்று நம்புவதாகவும் தெரிவித்தார்

★ வடக்கு - கிழக்கு மாகாணசபை

# முதல்வர், அமைச்சர்களை நீக்க ஆளுநருக்கு அதிகாரம்!

## பிரதம செயலாளர் நீக்கப்பட்டு புதியவர் ஜனாதிபதியால் நியமனம்

(கொழும்பு)
**வடக்கு-கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் உட்பட அமைச்சர்கள், பிரதம செயலாளர் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்வதற்கும், அவர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிப்பதற்கும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்னவுக்கு ஜனாதிபதி நேற்று உரிய அதிகாரங்களை வழங்கினர்.**

இது சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நேற்று விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசா அரசியல் யாப்பின் 154 சிஷரத்தின் பிரகாரம் திரு வேலுப்பிள்ளை நடராஜா சிவராஜாவை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் பதவியிலிருந்து அகற்றுவதற்கான உத்தரவையும், திரு. சொர்ணலிங்கம் கணேசநாதனை பிரதம செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்கான உத்தரவையும் பிறப்பித்திருக்கின்றார்.

1987-ம் ஆண்டு மாகாண சபைகள் 42-ம் இலக்கச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வடக்கு— கிழக்கு மாகாண ஆளுநர் பிரயோகிப்பதற்கான உத்தரவுகளையும் ஜனாதிபதி பிறப்பித்துள்ளார்.

குறிப்பாக அதிகாரிகளைப் பதவி நீக்குதல்; அதிகாரிகளை நியமித்தல் தொடர்பாக அவசியம் ஏற்படும் பட்சத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ஆளுநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## தலைவர்களுக்கு தெய்வ ஆசி

(கொழும்பு)
இந்திய படை விலகல் பூர்த்தியானதை குறிக்கும் முகமாக ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாசாவுக்கும் இந்தியப் பிரதமர் திரு வி. பி. சிங்குக்கும் தெய்வ ஆசியை வேண்டி. குப்பியாவத்தை ஜெயசேகரா விகாரையிலும், பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலிலும் நேற்று மதவைபவங்கள் நடைபெற்றன

## 'மக்களுக்காக தமது ஆவியை ஈந்தார் அன்னை பூபதி"

(யாழ்ப்பாணம்)
''தமிழ்மக்கள் விடுதலைக்(காக) போராடிக் கொண்டிருந்த பொழுது ஒரு மாதம் உண்ணவிரதமிருந்து மறைந்தார் அன்னை பூபதி; அவர்களின் அஹிம்சைப்போராட்டம் தமிழீழ போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாகும்.

இவ்வாறு வண்ணர்பண்ணை ஐயனர் கோவிலுக்கருகாமை

(8-ம் பக்கம் பார்க்க)

## பாடத் திட்டத்தில் தமிழர்களின் உண்மையான வரலாறு மறைக்கப்பட்டுள்ளது!

கல்வி அமைச்சருக்கு மகஜர்

[அச்சுவேலி]
தமிழர்களின் வரலாறு பாடத்திட்டத்தில் மூடிமறைக்கப்பட்டு உண்மைக்குப் புறம்பான சிங்கள பௌத்த வரலாறுதான் இலங்கையின் உண்மையான வரலாறு என மாணவர்களுக்கு புகட்டப்படுகின்றது. இந்த நிலையை உடனடியாக தடுத்து நிறுத்தி உண்மையான வரலாற்றை பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.''

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(8ம் பக்கம் பார்க்க)

## தீ விபத்தில் 87 பேர் பலி

(நியூயோர்க்)
நேற்றுக்காலை நியூயோர்க் நகரிலுள்ள 'நைட்கிளப்' ஒன்றில் தீவிபத்து ஏற்பட்டதால் குறைந்தது 87 பேர் இறந்ததாக அறிவிக்கப்படுகிறது.

## இந்தியப்படை இலங்கையிலிருந்து திரும்பியது திருப்தியளிக்கிறது

- சோவியத் பாராளுமன்ற தூதுக் குழு

(கொழும்பு)
இந்தியப்படை இலங்கையிலிருந்து திரும்பியுள்ளது தமக்குத் திருப்தியளித்துள்ளதாக இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சோவியத் பாராளுமன்ற தூதுக்குழு தெரிவித்துள்ளது.

சோவியத் தூதரகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத் தூதுக்குழு மேலும் கருத்து வெளியிடுகையில் இலங்கைக்கும் சோவியத் நாட்டுக்கும் இடையே அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் நீண்டகாலமாக பரஸ்பர ஒருமைப்பாடும், நல்லெண்ணமும் நிலவுவதாகத் தெரிவித்தது.

இத்தூதுக்குழு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கும் விஜயம் செய்து அங்கு சுதேச கலை நிகழ்ச்சிகளின் ஒலி, ஒளிப்பதிவுகளை பார்வையிட்டது.

## தீயில் கருகி 25 பேர் பலி

(கேரளா)
மதவழிபாட்டு வைபவத்தில் படாசு கொளுத்தியதன் காரணமாக நிகழ்ந்த பயங்கர தீவிபத்தில் 25 பேர் தீயில் வெந்து மாண்டுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படையின் கடைசி அணி சென்னை வந்து சேர்ந்தது

(சென்னை)
இந்தியப்படையின் கடைசி அணி நேற்று மாலை சென்னை வந்து சேர்ந்தது

இலங்கையின் திருகோணமலையிலிருந்து வந்த இந்த அணியை சென்னை துறைமுகத்தில் இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் திரு ராஜா ராபண்ணு, தமிழக ஆளுநர் டாக்டர் பி. ஸி. அலெக்ஸாண்டர் ஆகியோர் வரவேற்றனர்.

தென் பிராந்திய இராணுவத் தலைமை தளபதி லெப்டினட் ஜெனரல் ஏ. கே. சட்டர்ஜி, கிழக்கு கடற்படைப் பிரிவு தளபதி வைஸ் அட்மிரல் ஜெனரல் ராம்தாஸ், தென் பிராந்திய விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் சண்ட் ஆகியோரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

## வல்வையில் ராஜீவ் பெருமாள் கொடும்பாவிகள் எரிப்பு

(வடமராட்சி)
முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் ஆகியோரின் கொடும்பாவிகள் கறுப்புத் துணியால் கட்டியநிலையில் வல்வை நவீன சந்தைக் கட்டடத தூணில் தொங்கவிடப்பட்டிருந்தன.

நேற்று மாலை 4-00 மணியளவில் இருவரின் கொடும்பாவிகளும் இறக்கப்பட்டு,

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக் குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

பலாலி வீதி கந்தர்மடத்தில் வீடு கட்ட உகந்த, நல்ல தண்ணீர் வசதியுடன் [3] மூன்று பரப்புக்காணி விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: த. குமாரசாமி, 272, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி 3647]

### காணி விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் நாலு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்: திருமதி ஜீ. மயில்வாகனம், 441, கோவில் வீதி, நல்லூர். (சி–3644)

### WANTED

Experienced middle age Sales Rep. required urgently. Salary & commission. Apply: Brite Soap Ind, K. K. S. Road, Mallakam. (C–3645)


# சட்டப்பேரவை உறுப்பினர் கடத்தப்பட்டார்!

(புதுடில்லி)

கலைக்கப்பட்ட ஜம்மு–காஷ்மீர் சட்டப்பேரவை சுயேச்சை எம். எல். ஏ. ஜனப் மீர் முஸ்தபா இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

உள்துறை அமைச்சரின் புதல்வியைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றபோது, தீவிரவாதிகளுக்கும் அரசுத் தரப்பினருக்குமிடையே பேச்சுக்கள் நடத்தி இணக்கம் காண வைத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைக் கடத்திய குழு எது? இவர் எங்கு இருக்கிறார்? நலமாக இருக்கிறாரா? என்பன பற்றிய விபரம் எதுவும் உடனடியாக அறிவிக்கப்படவில்லை. இவரைக் கடத்திய குழு எதுவும் இன்னும் உரிமை கோரவில்லை.

## பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை

இவரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் காஷ்மீர் பொலிஸார் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே காஷ்மீரில், பொலிஸ் துணைச் சுப்பிரின்டன் ஒருவரும் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (பூ)

## ஆய்வுக்கான ஏற்பாடு

(மட்டுவில்)

தென்மராட்சிப் பிரதேச மட்டத்தில் சமூக, பொருளாதார வளங்கள் பற்றிய ஆய்வு ஒன்றினை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை தென்மராட்சிப் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு ப. சுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இந்த ஆய்வினை மேற்கொள்ளுவதற்கு முதல் நடவடிக்கையாக, படித்து வேலையின்றி இருக்கும் வாலிபர்களை, ஒரு கிராமசேவை அலுவலர் பிரிவுக்கு, ஐந்து பேர் வீதம் தெரிவு செய்து, அவர்களுக்கான பயிற்சிகள் கொடுக்கப்படவுள்ளது,

## கைதடி கொத்தணி தமிழ்த்தினப் போட்டி

(நாவற்குழி)

கைதடி கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் நாவற்குழி மகாவித்தியாலயம் 22 நிகழ்ச்சிகளில் பங்குபற்றி 12 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும் 3 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் 3 நிகழ்ச்சிகளில் மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம் 4 நிகழ்ச்சிகளில் முதலாம் இடததை யும் கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் எட்டு நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும், 4 நிகழ்ச்சிகளில் மூன்றும் இடத்தையும் 8 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும். 3 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் 2 நிகழ்ச்சிகளில் மூன்று இடத்தையும் பெற்றுக்கொண்டன.

கைதடி நாவற்குழி அ. த. க, பாடசாலை 9 நிகழ்ச்சிகளில் பங்குபற்றி 2 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும். 2 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும், 2 நிகழ்ச்சிகளில் மூன்றும் இடத்தையும், கைதடி நவீல்ட் பாடசாலை 2 நிகழ்ச்சிகளில் பங்குபற்றி ஒரு நிகழ்ச்சியில் முதலாம் இடததையும். குருசாமி வித்தியாலயம் 3 நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும், 5 நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்றையும், ஒரு நிகழ்ச்சியில் மூன்றும் இடத்தையும், எருதிடல் வித்தியாலயம் ஒரு நிகழ்ச்சியில்மட்டும் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (107)

## ஆங்கில ஆசிரியர் பத்தாயிரம் பேர் விண்ணப்பம்

[கொழும்பு]

இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் பதவிக்காக இதுவரை சுமார் 10,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

பத்தாயிரம் விண்ணப்பங்களுள் 3.000 விண்ணப்பங்கள் இளைப்பாறிய ஆங்கில ஆசிரியருடையதாகும்.

மேல் மாகாணத்திலிருந்து 126 விண்ணப்பங்களும், தென் மாகாணத்திலிருந்து 170பட்டதாரி ஆசிரியர்களின் விண்ணப்பங்களும்கிடைத்துள்ளன.

மாகாண கல்விப்பணிப்பாளருடாக தகுதியானோருக்கு தற்காலிக அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்படும்.

மேற்படி தகவல்களை கல்வி கலாசார தகவல்துறைஅமைச்சர் திரு. ஜே எம். லொக்கு பண்டார தெரிவித்தார். (க)

## பாடசாலை சமுதாயத்தின் சொத்தாகும்

(மட்டுவில்)

''ஒரு சமுதாயத்தின் கல்வியை வளர்ப்பது பாடசாலை. ஆன்மீகத்தை வளர்ப்பது ஆலயம். பாடசாலையோ ஒரு சமுதாயத்தின் பாரம்பரியச் சொத்து. அதை பாதுகாத்து வளர்ச்சியடையச் செய்ய வேண்டியது இச் சமுதாயத்தின் கடமை.''

இவ்வாறு மட்டுவில் சந்திர

(7ம் பக்கம் பார்க்க)


உ

## செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிசேக தினம்

நிகழும் பங்குனி மாதம் 15ம் திகதி

(28-3-90) புதன்கிழமை

காலை 7-00மணியளவில்

1008 சங்கு அபிசேக வைபவமும்

அளவெட்டி N. K. பத்மநாதன் கோஷ்டியினரதும் சிதம்பரநாதன் கோஷ்டியினரதும்

நாதஸ்வர இசை பொழிய பக்தர்களின் கூட்டத்துடன் சுவாமி வீதிவலம் வருவார். பகல் அடியார் மடத்தில் அன்னதானம் நடைபெறும். இத்தினத்தில் அன்பர்கள் அடியார்கள் பெருமானின் ஆசிபெற்றுச் செல்லும் வண்ணம் வேண்டுகின்றோம்.

(ஏ 3649)


## "பௌத்த தர்மத்தை கடைப்பிடித்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்போம்"

### - ஜனாதிபதி பிரேமதாசா

[கொழும்பு]

''வாழவும், வாழவழிவிடவும் வகைசெய்யும் வாழ்க்கையைக்காண நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். கருணை அன்பு, ஒப்புரவு, சாந்தம் ஆகிய பண்புகளை வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் நாம் இதனை நிச்சயமாக அடைந்து விடலாம்''

ஆசிய பௌத்த காங்கிரஸின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

''உலக சமயங்களின் பிறப்பிடமாக ஆசியா இருந்து வந்துள்ளது. ஆசியநாடுகளிலேயே மனித நாகரிகம் தோன்றி வளர்ந்துள்ளது. காலஓட்டத்தில் ஆசியமக்கள்மேற்கத்தேய நாகரிகத்தை பின்பற்றத் தொடங்கினர். இளம் சந்ததியினருக்கு இது மிகப் பெரும் சவாலாக அமைந்துள்ளது.''

இந்தச் சவாலை நாம் எதிர்நோக்கி எமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாயின் பௌத்த தர்மத்தைக் கடைப்பிடிப்பது மாத்திரமன்றி இத்தர்ம போதனைகளை உலகின் பல பாகங்களிலும் பரப்புவதற்கு பௌத்த காங்கிரஸ் உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்'' என்றார். (அ)


## கம்பியூட்டர் கல்வி

Diploma in data processing and Computer programming in Basic Language

ஆரம்பம்:

28 Mar. 90 (திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 10-30 a. m.


07 Apr 90(சனி, ஞாயிறு வகுப்புக்கள்) 11-00 a.m.

கட்டணம் 1500/-

★ Word Processing

ஆரம்பம்: 25 MAR. 90

O/L படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். சேரும்பொழுது செலுத்த வேண்டியது ரூபா 500/- மாத்திரமே.




UNIKCO COMPUTER CENTRE

No. 5, Power House Road, 2nd Lane, Jaffna.

(ஏ 627)


## "சிந்திக்கும் ஆற்றலை மாணவர்கள் இழந்து வருகின்றனர்"

(உடுவில்)

''மாணவர்கள் கல்வியில் தாமாகவே சிந்திக்கும் ஆற்றல்களை இழந்துவருகின்றனர். நாம் பல இழப்புக்களை எதிர்கொண்டுள்ளோம். சிந்திக்கும் ஆற்றலையும் இழந்தால் அதுவே நமது சந்ததியின் இறுதி இழப்பாக அமையும.''

இவ்வாறு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மருதனுமடம் கோட்டக் கல்வி நிலைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே.ஆர்.குலசேகரன் கூறினார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரரேசன் தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரம் தொடர்ந்து பேசியதாவது:-

''மாணவர்களிடையே வாசிக்கும் பழக்கம் மிகவும் குறைந்துள்ளது. மாணவர்கள் வாசிப்பதற்கு உகந்தாக நூல்களும் இல்லை எனினும் பாடப்புத்தகங்களை மட்டுமன்றி உலகம் சம்பந்தமான அறிவைப் பெற்றுக்கொள்ள மாணவர்கள் நிறையப் புத்தகங்களைவாசிக்கவேண்டும்.''

செல்வி தனுஜா சுந்தரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். விழா ஆரம்பத்தில்பாடசாலை நெறியாளர் தர்வி களுக்கு திருமதி தேவகன்யா குலசேகரம் சின்னங்கள் சூட்டினார். (109)

## "கிராம அபிவிருத்தியில் முன்னின்று உழைத்தவர்"

(பண்டத்தரிப்பு)

''சில்லாலைக் கிராமத்தின் பொதுவான அபிவிருத்திப் பணிகளில் அமரர் நீ. ஜேம்ஸின் பங்களிப்பு அளப்பரியது. சில்லாலையில் உப தபால்நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடம், யாழ்ப்பாணம்-சில்லாலை பஸ் சேவை ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கு முன்னின்று உழைத்த அமரர் ஜேம்ஸின் சமூக, சமய, கல்விச் சேவைகளை எவரும் மறந்துவிடமுடியாது.''

இவ்வாறு சில்லாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடத்தில், அமரர் நீ ஜேம்ஸின் முதலாவது நினைவு தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற உருவப்படத் திறப்பு வைபவத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சில்லாலைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவரும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச ஆணையாளருமான டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் அமரர் நீ. ஜேம்ஸின் உருவப் படத்தை பண்டத்தரிப்பு பட்டினசபையின் முன்னாள் தலைவரும், சில்லாலை ப நோ. கூ. சங்கக் கிளையின் தலைவருமான திரு. றேக் சூசைப்பிள்ளை திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அதிபர் திரு. அருள் சுப்பிரமணியம் உரையாற்றுகையில்; சுமார் 32 வருடகாலம் அமரர் ஜேம்ஸுடன் இணைந்து பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்ததாகவும், அவர் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில், மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடைந்ததாகவும் குறிப்பிட்டார்.

வித்தியாலய முன்னாள் உப அதிபர் திரு. எல். ஏ. சிங்க

(7ம் பக்கம் பார்க்க)

# யாஸிர் அரபாத் இன்று இந்தியா விஜயம்

## இலங்கையின் இன்றைய நிலைப்பாடு குறித்தும் விவாதிப்பார்

(புதுடில்லி)

பலஸ்தீன அதிபர் யாஸிர் அரபாத் மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை புதுடில்லி வந்துசேருவார்.

புதுடில்லிக்கு விஜயம் செய்யும் அதிபர் யாஸிர் அரபாத்தை வரவேற்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டதாகவும், உயர்மட்டத் தலைவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதமர் வி. பி. சிங் உட்பட பல அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவிருக்கும் யாஸிர் அரபாத் மேற்காசிய விவகாரங்கள் உட்பட பல உலக விவகாரங்கள் பற்றி விவாதிப்பார் எனத் தெரிய வருகிறது.

இலங்கையின் தற்போதைய நிலைப்பாடு பற்றியும் விவாதிக்கப்படலாம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவர் இங்கு தங்கியிருக்கும் நாட்களில் இஸ்லாமியப் பல்கலைக்கழகம் ஒன்று 'கௌரவ டாக்டர்'' பட்டம்வழங்கி இவரைக் கௌரவிக்க இருக்கிறது.

1988ம் ஆண்டிற்கான சர்வதேச பரிவுணர்வுக்கான ஜவஹர்லால் நேரு விருதும் வழங்கப்பட இருககிறது. (க)

# பனிப்பாறைச்சரிவு: 7பேர்பலி

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீர் பகுதியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பனிப்பாறைச் சரிவில் அகப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் பலியானுர்கள்.

சடலங்களைத் தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

பனிப் பாறைச் சரிவு தொடர்ந்து இடம்பெறலாம் என்ற அச்சம் காரணமாக இப்பகுதியில் வசிக்கும் மக்கள் அவரவர் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாமென எச்சரிக்கப்பட்டுள்ளனர். (க)

# 'குருவுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்'

(உடுவில்)

''குருவைப் பெருமைப்படுத்தும் பணியில் இந்துமத குருகுலங்கள் ஈடுபடுவது பாராட்டத்தக்கது. ஆண்டுதோறும் இதுபோன்று குருவை பெருமைப்படுத்துவதும பாராட்டுவதும் குருஸ்தானத்தில் உள்ளவருக்கு கௌரவத்தை வழங்குவதோடு, மறைமுகமாக இளம் சந்ததியினருக்கு ஒரு ஊக்கமளிப்பதாகவும் அமைகிறது.''

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணசுவாமி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்களைப் பாராட்டி உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருககள் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ்ப்பாணம் சிவானந்த குருகுல பரிபாலன சபையினர் வருடந்தோறும் பாராட்டு பரிசளிப்பு வைபவ ஒழுங்கில், இம்முறை சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்கள் கௌரவிக்கப்பட்டார்.

யாழ் கடையிச்சாமி வீதியில் உள்ள மேற்படி குருகுலத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதச் குருக்கள் தலைமை வகித்தார். குருகுல உப தலைவர் சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக் குருக்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது: ''சிவபெருமானின் அம்சங்களே குரு. சிவபெருமானின் அறுபத்திநான்கு திருக்கோலங்களில் ஒன்ருவது வயது போன உருவத்தை காட்டவில்லை இளைஞர்களாகவே குரு உள்ளார். பாரதத்தில் கர்ணனின் குருத்தோற்றம், குருவாக வந்து உபதேசித்த முருகனின் உருவம் யாவும் இளமைத்

[6-ம் பக்கம் பார்க்க]

# 'இந்திய - பாக். யுத்தத்திஞல் எந்த நன்மையும் ஏற்படாது'

## பிரதமர் பெனுஸிர் பேட்டி

[இஸ்லாமபாத்]

இந்தியாவும் பாகிஸ்தானும் அர்த்தமற்ற வீண் கூச்சல் போட்டிகளில் தங்கள் காலத்தையும் சக்தியையும் வீணுக்குவது எனக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது என்று பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''இந்திய-பாகிஸ்தானிய யுத்தம் எந்தஒரு நன்மையையும் ஏற்படுத்தப்போவதில்லை. மாருக இந்த யுத்தத்திஞல் இரு நாடுகளிலும் உள்ள அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்பிற்கும் இரு நாடுகளின் பொருளாதார நலிவிற்குமே வழிகோலும், இரு நாடுகளுக்கும் யுத்த தளபாடங்கள் வழங்கி, அவற்றின் மூலம் இலாபமடைய விரும்பும் நாடுகள் இலாபமடைந்ததாகக் கருதலாமே தவிர வேறு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை'' என்று தெரிவித்திருந்த திருமதி பெனுஸிர் பூட்டோ, ''பொருளாதார நிலையில் நலிவடைந்திருக்கும் தெற்காசிய நாடுகளுக்கு இது போன்ற யுத்தங்கள் அவசியமில்லை'' என்ருர். [க]

# 'ஆலயவரலாறுகள் சமய வளர்ச்சிக்கு உதவும்'

(யாழ்ப்பாணம்)

''ஊர்தோறும் அமைந்திருக்கும் ஆலயங்களுக்குத் தனிமையான வரலாறுகள் உண்டு. அவ்வூர் மக்கள் இறையருளிஞல் அடைந்த அற்புதச் சம்பவங்களும் உண்டு. அவற்றை எல்லாம் அத்தலங்களின் வரலாற்றில் இடம்பெறச் செய்வதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் அவற்றை அறியவும், ஆலய வழிபாடுகளில் அக்கறைகொள்ளவும் தூண்டுகோலாக அமைகின்றன. கும்பாபிஷேகத் தினங்களையொட்டி வெளிவரும் குடமுழுக்கு விழா மலர்களில் இவ்வரலாறுகள் இடம்பெறுவது சமய வளர்ச்சிக்கும், ஆலயங்களின் மகிமைக்கும் சிறந்த பொக்கிஷங்களாக அமைகின்றன'' என்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திக்கரை முருகமூர்த்தி கோயில் குடமுடக்கு விழா மலரினை வெளியிட்டு உரைநிகத்துகையில் குறிப்பிட்டார்.

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோயில் மண்டபத்தின் திருப்பணிச் சபைத் தலைவர் திரு. ச. வி. முருகேசு அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றகுடமுழுக்கு விழாவில் நல்லையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்கினுர்.

திரு. சிவமகாலிங்கம் பாராட்டுரை வழங்கியதைத் தொடர்ந்து நூலாசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணனுக்கு தலைவர் ச. வி. முருகேசு பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

'சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றிவரும் திரு. கோபாலகிருஷ்ணன் அவர்களின் பணியை சைவ உலகம் என்றும் மறக்காது'' என்று திரு. ச. வி. முருகேசு பாராட்டினுர்.

திக்கரை அந்தாதிக் கீர்த்தனைகள் பாடிய பிரம்பஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்களுக்கு திரு மு பாலசிலிங்கம் அவர்கள் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்கள்.

திரு ஐ. தி சம்பந்தன் அறிமுகவுரையை நிகழ்த்துகையில்; திக்கரை முருகன் மகிமைகளையும, அற்புதச் செய்கைகளையும் விளக்கிக் கூறினுர். சுமார் 20 லட்சம் ரூபா செலவில் அமையவிருக்கும் இராஜகோபுரத்திற்கு தாராளமாக நிதியுதவி வழங்குமாறு முருகன் அடியார்களை வேண்டிக் கொண்டார்.

இவ்விழாவில் திரு. பொ. சுப்பிரமணியம், திரு த அம்பிகைபாகன் திரு. வே. நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராசா அவர்கள் தலைமையில் 'கந்தன் நான்முகனைச் சிறை வைத்தது' பட்டிமன்றம் இடம்பெற்றது.

# கமலஹாசனுக்கு பத்மஸ்ரீ விருது

(சென்னை)

தென்னிந்திய திரைப்பட நடிகர் கமலஹாசனுக்கு நேற்று முன்தினம் பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1990ம் ஆண்டிற்கான இந்த விருதுகளை ஜனுதிபதி ஆர் வெங்கட்ராமன் வழங்கினுர்.

நாட்டியக் கலைஞர் செல்வி லீலா சாம்சன், நடிகர் ஓம்புரி உட்பட இருபதுபேருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

ராக்கெட் நுட்பவல்லுநர் டாக்டர் அபுல் சலாம், கர்னுடக இசைக் கலைஞர் செம்மாங்குடி சீனிவாசக ஐயர், தலைமை கணக்கு அதிகாரி டி. என். சதுர்வேதி, பாதுகாப்பு அமைச்சு விஞ்ஞானி டாக்டர் சி. எல். அருணுசலம், ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர் திரு. குமார் காந்தராவ் ஆகிய ஐந்து பிரமுகர்களுக்கும் ஜனுதிபதி ஆர். வெங்கட்ராமனுல் 'பத்ம பூஷன்' விருதுகள் வழங்கப்பட்டன.

ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற இந்த விருதுவழங்கும் விழாவில் பிரதமர் வி. பி. சிங் முன்னுள் ஜனுதிபதி ஜெயில் சிங் உட்பட பலர் கலந்து கொண்டனர். (து)

## கொழும்பிலிருந்து தங்கம் கடத்திய ஜேர்மனியர்கைது!

[திருச்சி]

கொழும்பிலிருந்து விமானத்தில் திருச்சி வந்த ஜேர்மனியர் ஒருவர் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளைக் கடத்த முயன்றபோது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

பாத அணியின் உட்பக்கத்தில் 9 தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்த இவரை சுங்கத்துறையினர் கைது செய்தனர். (து)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி

[காங்கேசன்துறை]

வலிவடக்குப் பகுதியில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை நினைவாக பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

முக்கிய சந்திகளில் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி செய்யப்படுவதுடன் அஞ்சலி உரைகளும் ஒலிபரப்பப்படுகின்றன. [86]

## கேரளத்தில்

# பட்டாசு வெடித்ததில் 25பேர் பலி; பலர் காயம்!

(திருவனந்தபுரம்)

கேரளா மாநிலத்தில் கொல்லம் அருகே ஒரு கோவிலில் பட்டாசு வெடித்ததில் ஏற்பட்ட விபத்தில் 25பேர் பலியாஞர்கள். 20பேருக்கு மேல் காயமடைந்தனர்.

இங்குள்ள ஆலயமொன்றில் வாணவேடிக்கைக்காக குவித்து வைக்கப்பட்டிருந்த வாணங்கள், பட்டாசுகளில் தீப்பிடித்ததால் இவ்விபத்து ஏற்பட்டது. இதனுல் ஸ்தலத்திலேயே 23பேர் இறந்துள்ளனர். காயமேற்பட்டோர் பல்வேறு மருத்துவ மனைகளுக்கும் அனுமதிக்கப்பட்டனர். அங்கு மேலும் இருவர் இறந்துள்ளனர்.

இறந்தவர்களின் ஒவ்வொருவரின் உறவினர்களுக்கும் அரசு ரூபா 5000மும், கோவில் நிர்வாகத்தினர் 3,000 ரூபாவும் கருணைத் தொகையாக வழங்க முன்வந்துள்ளனர். (பூ)

# நிவாரணம் பெறவந்த ஒரு பெண்ணின் கதை இது

(யாழ்ப்பாணம்)

''நான் தென்மராட்சியைச் சேர்ந்தவள். இந்தக் கொதிக்கும் வெய்யிலில் 2 மணித்தியாலமாக நிற்கிறேன் இன்னும் நிவாரணப் பணம் பெறவில்லை என்னைப் போன்ற தென்மராட்சி மக்களுக்கு, சாவகச்சேரியில் உள்ள வங்கிகளில் இப்பணத்தை வழங்கியிருந்தால் எவ்வளவு சுலபமாகவும், உதவியாகவும் இருந்திருக்கும்''

இவ்வாறு நேற்று ஞாயிற்றுக்கிழமை, மீளக் குடியமர்தல் பணம் பெறுவதற்கு யாழ் ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கியூவில் நின்ற திருமதி தவமணிதேவி பாலசிங்கம் என்னிடம் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது; ''ஒவ்வொரு கிழமையும் தென்மராட்சி போன்ற தூரப் பிரதேசத்து மக்களுக்கு நிவாரணப் பணம் கொடுக்கிருர்கள். இந்த மக்களின் பரிதாப நிலையை வங்கி அதிகாரிகளும், கச்சேரி அதிகாரிகளும் உணர்ந்து, அந்தந்தப் பிரதேசத்தில் நிவாரணப் பணத்தைக் கொடுக்க ஆவன செய்யவேண்டும்''

கடந்த சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையிலும், ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் ஏராளமான பொதுமக்கள், கொதிக்கும் வெய்யிலில் நின்று பணத்தை பெற்றுச் சென்றனர். (152)

# 23 பேர் பலி! 26 பேர் படுகாயம்

(புதுடில்லி)

குஜராத்மாநிலத்தில் நேற்று முன் தினம 'ட்ரொலி' யுடன் ட்றக் வண்டியொன்று மோதியதில் 23பேர் கொல்லப்பட்டனர்! 26 பேர் காயமடைநத னர்.

'ட்ரொலி' ஒன்றில் 44பேர் சென்றுகொண்டிருக்கும்வேளையில் எதிராகவந்த ட்றக் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது. (பூ)

### மணிவாக்கு

"உள்ளத்தில் அமைதி இல்லாதபோது அதைப் புறத்தே காண முயற்சி எடுப்பது பயனற்றதாகும்"
— நல்வழி.

## நமது நோக்கு

# உலகத்தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்!

அண்மையில் உயர்தரப் பரீட்சை முடிவுகள் வந்தபோது பல இளைஞர்கள் விரக்தியால் வாடிப் போவதைப் பார்த்தோம்.

உயர் கல்வியை மாத்திரம் குறிக்கோளாகக்கொண்ட கல்விமுறையில் இத்தகைய விரக்தி சமுதாயம் முழுவதற்கும் பரவி, கல்வி முதலீடு பயன்தரா நிலை உருவாவதற்கு வழிபிறக்கிறது.

ஐந்து சதவீத மாணவர்களைக் குறியாக வைக்காது, ஏனைய 95 சதவீத மாணவர்களுக்கு ஏற்ற பொதுக்கல்வியையும், தொழிற் கல்வியையும் பற்றிய சிந்தனை காலத்திற்குக் காலம் வலியுறுத்தப்பட்டாலும், செயலுருவிற் பாரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

பரீட்சையில் தவறியோர்களை வழிப்படுத்தி அவர்களுடைய ஆற்றல்கள் மனப்பாங்குகளைக் கருத்தில் எடுத்துத் தகுந்த தொழில் வழிகாட்டல் மூலம் பயனுள்ள தொழிற்பயிற்சிகள் ஒழுங்குபடுத்தப்படுவதில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ஆனால், சமுதாயத்திலே உள்ள ஏற்றத்தாழ்வுகள், மனப்பாங்குகள் போன்றவற்றின் காரணமாக, முறையான தொழிற்பயிற்சியை விரும்பி ஏற்போர் தொகை கணிசமான அளவு இல்லை.

நாடு விடுதலை அடைந்த நாள் முதல் சமுதாயத்திற்கு நலன்புரியவேண்டுமென்ற ரீதியில் கொண்டு வரப்பட்ட இலவச அரிசித் திட்டம், உணவுமுத்திரை, ஜனசவிய திட்டம் போன்றவை கூட தொழில்களை உவந்து செய்யத் தடையாயிருந்து வந்தனவோ எனச் சிலரை எண்ணவைக்கின்றது.

இந்தவேளையில், கெயர் சர்வதேச நிறுவனம் வடபகுதியிலே ஆயிரத்து ஐநூறு இளைஞர்களுக்கு மூன்றுண்டுப் பயிற்சி வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தச்சு வேலை, மேசன் வேலை, மின் இணைப்பு, குழாய் இணைப்பு போன்றவற்றிற்கு முறையான பயிற்சி கொடுக்கவும், பயிற்சிக் காலத்திற் படி வழங்கவும், பயிற்சி முடிவில் சுய வேலைவாய்ப்புக்கான கருவிகள், உபகரணங்கள் வழங்கவும் ஒழுங்குகள் உள்ளன.

போதிய பயிற்சியில்லாமல் நுட்பமான வேலையைச் செய்யப்போவதால் ஏற்படும் சேதங்களையும் நட்டங்களையும் நாடறியும்.

ஏற்கனவே பல ஸ்தாபனங்கள் இத்தகைய பயிற்சிகளை வழங்க முன்வந்தபோதெல்லாம், பயிற்சிபெற முன்வருவோர் தொகை மகிழ்ச்சிதரக் கூடியதாக அமையவில்லை.

இத்தகைய வாய்ப்புகளை நழுவவிடாது, பயிற்சி பெறப் பலர் முன்வரவேண்டும். அனைத்துத் தொழில்களையும் உவந்துசெய்யும் மனப்பாங்கு வளரவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

குறிக்கோள் இல்லாத பயணம் நிலைகுலைந்த பயண தபக்காலம் பயணத்தை ஆரம்பித்து நடு வழியில் நிற்கிறோம் விபூதி புதன் கடந்து 4 வாரங்கள் ஆகிவிட்டன. உயிர்த்த ஞாயிறை அண்மிக்க இன்னும் 3 வாரங்கள் இருக்கின்றன! பயண ஓட்டத்தில் ஓர் தள்ளாட்டம் எதற்கும் திருப்பிப் பார்ப்பதும், முன்நோக்குவதும் நன்மையாக இருக்கும். இன்றும் வந்த பாதையில் செல்லவேண்டுமே என்ற அங்கலாய்ப்பா? இல்லையேல் இன்னும் முன்னேற என்னென்ன வழிகளை மேற்கொள்வேன் என்ற புத்துணர்வா (புதுமனிதர்கள் ஆகவேண்டும்) உடையிலும். நடையிலும் அல்ல உள்ளத்திலும் உணர்விலுமே. என்னிலிருந்து நான் வேறுபடவேண்டும், எனதுபோலி மதிப்பீடுகள், சிந்தனையான எண்ணங்கள் உருமாற்றம் பெறவேண்டும். நான் கொண்டிருக்கும் நாட்டங்கள், அது பாவத்தில் ஊறியதாய் இருப்பின், அவற்றிற்கு பிரியாவிடை கொடுக்கவேண்டும்.

இறைவாக்கினுல் இசையால் கூறுவதுபோல் இறைவன் படைக்கும் புதிய வானகத்திலும் வையகத்திலும் நாம் பங்காளிகளாக மாறுவதே எமது நோக்கமாகி இருக்க வேண்டும். ஆனால் இறைவனின் உரிமையாளர்களாக மாறுவது இலகுவான ஒன்று அல்ல, நன்மை செய்யவந்த அவருக்கே கிடைத்த பரிசு, சிலுவை மரணமென்றால் அவருடைய சீடர்களாகிய எமக்கு அதுவிதிவிலக்கல்ல. "இறைவாக்கினருக்குத் தம் சொந்த ஊரில் மதிப்பில்லை" என்கின்றார்.

அருட்திரு அ. லோறன்ஸ்
சாவகச்சேரி.

### குளத்துள் இறங்கியது

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மினிபஸ் ஒன்று பாதையை விட்டு விலகி றீகல் தியேட்டருக்கு அண்மையிலுள்ள குளத்துக்குள் இறங்கியது.

குளத்தின் கரை சகதியாய் இருந்ததால் பிரயாணிகள் காயமெதுவுமின்றி தப்பித்துக்கொண்டனர். (152)

## ஒரு கண்ணீர்க் கதை

# கைக்கெட்டியது வாய்க்கெட்டாத படலம்!

மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் விஞ்ஞான/கணித ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்புக்குரிய போட்டிப் பரீட்சை 1988ல் நடைபெற்றது.

மீசாலையிலிருந்து விண்ணப்பித்த அந்தப் பிள்ளையும் அப்பரீட்சையை எழுதியது. பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே வரும்போது அதன் முகத்திலே மலர்ச்சி—நன்றாக விடை எழுதினேன் என்ற பெருமிதம்!

தெரிவு செய்யப்பட்டதாகக் கடிதம் வந்தபோது இரட்டிப்பு மகிழ்ச்சி. யா/கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தொகுதி வாரியாகச் சேவைக் கால முன் பயிற்சி—அதிலும் இவர் ஒழுங்காகப் பங்குபற்றியிருக்கிறார்.

பயிற்சியை முடித்தவர்களுக்கு மாவட்டக் கல்வித் திணைக்களங்களில் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி செய்தித் தாள்களில் வழமையான விளம்பரம். குறிப்பிட்ட திகதிகளில் நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

யார் கண்ணுரோ தெரியவில்லை; கதையிலே ஒரு திருப்பம்!

1-2-89 தொடக்கம் 12-2-89 வரை பயிற்சி பெற்றவர்கள் பற்றிப் பத்திரிகைகளில் எதுவும் வரவில்லை. மூன்று மாதங்களாக எதிர்பார்த்திருக்கிறார். எதுவும் கிடைக்கவில்லை.

விசாரித்துப் பார்த்திருக்கிறார். அத்தொகுதியிற் பயிற்சி பெற்ற சிலருக்கு எப்படியோ நியமனம் கிடைத்திருக்கிறது.

கலங்கிவிட்டார்; அழாக் குறையாக நியமனம் பெற்றவர்களை அணுகித் துருவி விசாரித்திருக்கிறார் கிடைத்த தகவல்? "பத்திரிகையில் வராது; கொழும்பு கல்வித் திணைக்களத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு நியமனக் கடிதத்தைப் பெறலாம்!"

மீண்டும் ஒரு மகிழ்ச்சி; ஒரு நப்பாசை! பயிற்சிச் சான்றிதழோடு கொழும்புக் கல்வித் திணைக்களத்திற்கு ஒரு ஆவலான பயணம்!

சான்றிதழை வாங்கிக் கொண்டு "நியமனம் வரும்; சென்று வா மகளே!" என்றிருக்கிறார்கள்.

19-12-89ஆம் திகதியிடப்பட்ட கடிதம் நல்ல செய்தியைத்தந்திருக்கிறது. "தெரிவு செய்யப்பட்டுள்ளீர்; மாகாண சபைக்கூடாக கடிதம் வரும்!"

மீண்டும் மகிழ்ச்சி—கதையிலே ஒரு விறுவிறுப்பு!

ஒரு மாத காலமாக ஒன்றும் நடைபெறவில்லை. மீண்டும் ஒரு பயணம்—இம்முறை திருகோணமலைக்கு! "எமக்கு இதுவரை எவ்வித அறிவித்தலும் வரவில்லை; வந்ததும் உடன் அனுப்பிவைப்போம்!" —ஒரு ஆறுதல் செய்தி!

பல நாட்களாக எவ்வித தகவலும் இல்லை. இன்னோர் பயணம் கொழும்புக்கு! ஒரு விசாரிப்பு. வேறு நியமனங்கள் பற்றி ஒரு விசாரணை நடைபெறுவதாகவும், அதுவரை எவ்வித நியமனமும் வழங்க முடியாதிருப்பதாகவும் ஒரு ஆறுதல் தகவல்.

எதுவும் நடக்கவில்லை—ஏக்கம் தணியவில்லை. வேறு பல ஆசிரியர் நியமனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆனால் இவருக்கு?—தொடர்ந்தும் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறார்.

— சிவா

# திரைப்பட மேதை சத்யஜித்ரே

திரைப்பட மேதை சத்யஜித்ரேயின் திரைப்படவிழா கொழும்பில் நடைபெறுகிறது. இதனையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

திரைப்படத்துறை ஏறக்குறைய 100 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டுள்ளது. திரைப்பட மேதைகள் என்று சொல்லக்கூடிய பலகலைஞர்கள் உருவாகி, காலத்தால் நிலைக்கக்கூடியதான திரைப்படக் காவியங்களைப் பல மொழிகளிலும் உருவாக்கியுள்ளார்கள். வங்காளத் திரைப்பட மேதை சத்யஜித்ரே சர்வதேச ரீதியில் அறியப்பட்டவராக மிக உயர்ந்த திரைப்படப் படைப்பாளராகக் கௌரவம் பெறுகின்றார்.

கலாசார முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகக்கொள்ளக்கூடிய 'சத்யஜித்ரே திரைப்பட விழா' வொன்று தற்பொழுது கொழும்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

1921-ம் ஆண்டில் பிறந்த சத்யஜித்ரே, கலை, இலக்கிய ஈடுபாடு கொண்ட குடும்பச் சூழல் காரணமாக இளமையிலிருந்தே கலை இலக்கியங்களினால் ஈர்க்கப்பட்டார். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பொருளியல் பட்டம் பெற்றபோதும், இவ்விடுபாடுகளினால் ரவீந்திரநாத்தாகூரின் சாந்திநிகேதனில் சேர்ந்து ஓவியக்கலை கற்றார். இளமையிலிருந்தே நல்ல திரைப்படங்களை இனங் காணவும், அதனை அனுபவிக்கவும் ரேயினால் முடிந்தது. இவற்றின் மூலம் திரைப்படம் பற்றிய அடிப்படை அம்சங்களைப் புரிந்துகொண்டு அவைபற்றித் தானாகவே கற்றுக்கொண்டார்.

சத்யஜித்ரே முதன் முதலில் நெறிப்படுத்திய திரைப்படம் 'பதர்பாஞ்சாலி' 'சைக்கிள் திருடன்' என்ற இத்தாலியத் திரைப்படத்தால் பெரிதும் கவரப்பட்ட ரே, அத்திரைப்படத்தைப் போலவே தனது முதல் படைப்பையும் மிகஎளிமையானதாக, பெயரறியா நடிகர்களைக்கொண்டுஉருவாக்கினார். ரேயின் முதலாவது திரைப்படமே அவரையொரு மகத்தான கலைஞராக உலகிற்கு அறிமுகமாக்கியது. 1915 – 20க்கிடையில், இந்திய வங்காளக் கிராமமொன்றின் வாழ்க்கையைப் பகைப்புலமாகக் கொண்ட 'பதர்பாஞ்சாலி' கிராமிய வாழ்வின் உயிர்த்துடிப்பை மிகவும் நுணுக்கமாக வெளிப்படுத்தியது. வங்காளத்தின் இன்னுமொரு திரைப்பட நெறியாளர் மிருணாள் சென் இவ்வாறு கூறுகின்றார். "பதர்பாஞ்சாலி' ஓர் இயக்கத்துக்கு அடிகோலியது. திரைப்படத்துக்கு ஒரு புதிய சாயலை அந்தப் படம் அறுதியிட்டு விளக்கியது." இப்படம் வெளிவந்த 1955-ம் ஆண்டு இந்திய அரசின் தங்க, வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டதோடு தொடர்ந்து வந்த பல சர்வதேச திரைப்பட விழாக்களிலும் அதி உயர் விருதுகளையும் பெற்றுக் கொண்டது. நியூயோர்க்கில் 'ஐந்தாவது வழிச் சினிமா'

(6ம் பக்கம் பார்க்க)

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** நான் ஒரு கூட்டுறவுச்சங்க ஊழியன், அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து கொடுக்கப்படும் ரூபா 200/- எங்களுக்குத் தரப்படவில்லை. நட்டத்தில் இயங்குவதாகக் கூறுகிறார்கள். சம்பள உயர்வு கிடைக்குமா?

- ஒரு கூட்டுறவு ஊழியன்.

**பதில்:** பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கினால் சம்பளஉயர்வுபோன்ற சங்கத்தை பாதிக்கக்கூடிய கருமங்கள் செய்யக்கூடாதென்ற விதி ஒன்று இருக்கிறது. இவ்விதியை தளர்த்தும்படி யாழ். மாவட்ட கூட்டுறவு தொழிற்சங்கம் மேலிடத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது. வாழ்க்கைச்செலவு கூடிய காலங்களில் ஊழியர்களுக்கு சலுகைகள் கொடுப்பது அத்தியாவசியமாகும். (152)

## பலதும் பத்தும்

### கையிலே! கால்!

"கவனம்! காலைவெட்டிக் கையிலே தந்திடுவன்...!" இப்படிச் சிலர் பயங்காட்டுவதுண்டு. ஆனால் ஒரு டாக்டர் காலைக் கையோடு கொண்டுதிரிய வைத்துவிட்டார்!

இதென்னபுதிரா...?என்ற ஏளனம்கேட்கின்றது. ஆனால் இது ஒரு உண்மைச் சம்பவம்.

பிரான்சிலே — பாதாள ரயில் பயணி ஒருவர் விபத்துக்கு ஆளாயிருக்கிறார். அவரின் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. ஆளையும் காலையும் டாக்டரிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

காலைக்கையுடனேதைத்து ஆளை வெளியே விட்டிருக்கிறார். விபத்துக்குள்ளானவர் இப்போது கையோடு கொண்டு திரிகிறார்... காலையும்! காலை, மாலை என்றிராது எப்போதும்...!

டாக்டர் ஏன் இதைச் செய்தார்? ஏதாவது... அப்படி......! இல்லவேயில்லை. அவருக்கு ஒரு திடீர் மூளை Intuition!

உடனடியாகக் காலைப் பொருத்துவதிற் பல சங்கடங்கள். ஆளையும் காப்பாற்றவேண்டும்; அதே சமயம் வெட்டுண்ட காலையும் 'உயிரோடு' வைத்திருக்க வேண்டும்.

இப்போது காலையும் 'உயிரோடு' வைத்திருக்கிறார்; நேரம், காலம் சரியாகவரும்போது, காலைக் கையிலிருந்து பிரித்து உரிய இடத்திற் பொருத்தி விடப்போகிறாராம்!

வாணி

# ஜி. ஸி. ஈ. பரீட்சைக்கு தோற்ற இவர்களுக்கும் அனுமதி

(கொழும்பு)

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரண தரம்) பரீட்சையில் தோற்றுவதற்காக தடுப்பு முகாம்களில் இருக்கும் மாணவர்களுக்கும் சந்தர்ப்பமளிக்கப்படும்.

இதன் பொருட்டு இன்று சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தடுப்புக் காவலிலிருந்து தற்காலிகமாக விடுவிக்கப்படுவார்கள்

# சீமெந்து லிமிட்டெட்டிடம் 'ஹாபர்வியூ' ஒப்படைப்பு

[காங்கேசன்துறை]

காங்கேசன்துறையில் இயங்கிய ஹாபர்வியூ ஹோட்டல் இராணுவமுகாம் முற்ருக மூடப்பட்டு லங்கா சீமெந்து லிமிட்டெட்டிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையில் சிறிலங்கா இராணுவத்தினரும், பழைய ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் சிறிலங்கா பொலிசாரும், துறைமுகப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

காங்கேசன்துறையிலிருந்து கீரிமலைக்குச் செல்லும் கரையோர வீதி நீண்ட காலத்திற்குப்பின் அண்மையில் திறந்துவிடப்பட்டதை அடுத்து இவ்வீதியால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

மிகவும் பெரிய அளவில் விளங்கிய ஹாபர்வியூ ஹோட்டல் முகாம் முற்ருக மூடப்பட்டுள்ளது.

இங்கு லங்கா சீமெந்து நிறுவன பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

பாதிப்புற்ற நிலையில் உள்ள இந்த ஹோட்டலை புனரமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

முன்பு இந்திய அமைதிப் படையினர் பெருமளவில் இப்பகுதியில் இருந்தமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. ஏராளமான ''சென்றி''கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன

இந்த வீதியும் மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது இவ்வீதியால் வாகனங்களின் போக்குவரத்து குறைவாகவே உள்ளது. தினமும் ஏராளமானேர் மக்கள் இப்பகுதியை பார்வையிட்டுச் செல்கின்றனர். [86]

## நஞ்சருந்தி வயோதிபர் தற்கொலை

(காங்கேசன்துறை)

மது வெறியில் வந்த வயோதிபர் ஒருவர் சாப்பாடு பிந்தியதால் மனம் நொந்து நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

புன்னலைக்கட்டுவனைச் சேர்ந்த வெள்ளையன் தம்பு (50 வயது) என்பவரே இவ்வாறு மரணமானுர்.

வேலை எதுவுமின்றியிருந்த காலஞ்சென்றவர் அடிக்கடி மது வெறியில் வீட்டில் சண்டை பிடிப்பாரெனவும், சம்பவதினம் அளவுக்கதிகமாக மது அருந்தி விட்டு வீட்டுக்கு வந்தாரெனவும், அன்று சமையல் பிந்தியதால் சண்டை பிடித்து விட்டு நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரிய வந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா தம்பிராஜா விசாரணை நடத்தி தற்கொலை என தீர்ப்பு வழங்கினுர். (86)

## 292 பேருக்கு நியமனம்

(மன்னுர்]

மன்னுர் மாவட்டத்திலிருந்து பயிலுநர் ஆசிரியர்களாக 292 பேருக்கு கடந்த 15ம் திகதி கடிதம் மன்னுர் அல்அசார் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக மன்னுர் மாவட்ட அரசஅதிபர் திரு. ஏ. சி. செபநாயகம் கலந்து கொண்டார் அத்துடன் மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சுரேஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினுர் உதவி அரச அதிபர்கள் கல்வி அதிகாரிகள் பலர் இவ்வைபவத்துக்கு வருகை தந்திருந்தனர்.

மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் நியமனக் கடிதம் வழங்கினுர்.

# இன்று தங்கஜூபிலி காணும் வண. பிலிப் பொன்னையா



ஆன்மீக பலமும், அருங்கொடை நிறைவும், புரிந்துணர்வும் படைத்த அருட்திரு பிலிப் பொன்னையா அடிகளார் அவர்கள் தனது குருத்துவ அபிஷேக தங்க யூபிலி விழாவை இன்று நன்றியோடு நினைவுகூருகின்ருர்.

ஆம் என்ருல் ஆம், இல்லை என்ருல் இல்லை என்றதெளிந்த நோக்குடைய இவர், இளைஞர்களை விளங்கி அவர்களை வழி நடத்தும் ஆற்றல் பெற்றவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் காலடியில் பயிற்சி பெற்றவர். 74 வயதிலும் இளைப்பாற்றியின்றி உழைப்பவர்.

அநுராதபுரம், பாஷையூர், ஊர்காவற்றுறை, செட்டிகுளம், கிளிநொச்சி, யாழ். பேராலயம், வவுனியா, மாங்குளம், நாரந்தனை, கோப்பாய், மாதகல், யாழ். அடைக்கல அன்னை ஆலயப்பங்குகள் அவரது பணிக்களங்கள் யாழ் மடுத்தீனுர் குருமடம், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அவரது உருவாக்கல் களங்கள்.

கொட்டடி, மணியந்தோட்டம் உதயபுரம், பூம்புகார் அவரது ஆன்ம தாகத்தின் வளர்க சான்றுகள். நீண்டகால அவரது பாடசாலை முகாமைத்துவப்பணி அவரது கலை, எல்லோருக்கும் சவாலாக விளங்கினுர் சட்டத்துறைக் கலாநிதி சட்டத்திற்கு அடிமையாகாமல், அதை மக்களுக்கு உதவுப்படியாக வித்திட்டவர். யாழ். திருச்சபை நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர், உள்ளங்களைப் புரிந்து செவ்வையான தீர்வுகளுக்குக் காரணமானுர்.

கள்ள நெஞ்சர்களுக்கு அவர் சிம்ம சொப்பனம், பலவீனர்களுக்கு அவர் கைகொடுத்த தெய்வம். அநீதியைத் தட்டிக் கேட்கும் துணிவாளர். அஞ்சாமல் பணியாற்றும் பண்பாளன். வாழ்க பல்லாண்டு, அவர் சேவை.

வண. ம. பெ.
ஞானரத்தினம்,
[பங்குத்தந்தை, வட்டக்கச்சி]

## திருமண முறிவினுல் மனமுடைந்த இளைஞர் நஞ்சருந்தி தற்கொலை!

(காங்கேசன்துறை)

திருமணம் பேசி முடிக்கும் தருணத்தில் திடீரென அது குழம்பியதால் மனமுடைந்த இளைஞர் ஒருவர் அளவுக்கதிகமாக மது அருந்தியதுடன் நஞ்சையும் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த சீமெந்துக் கூட்டுத்தாபனஊழியரான பொன்னுத்துரை தர்மகுலசிங்கம் (33 வயது) என்பவரே இவ்வாறு மரணமானுர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா இம்மரணம் குறித்து விசாரணை நடத்தினுர்.

காலஞ்சென்றவர் ஏற்னவே குடிப்பழக்கம் உடையவரெனவும், திருமணம்செய்து வைத்தால் திருந்திவிடுவார் என நினைத்து அவருக்கு பெண் பார்த்து திருமணம் பேசியிருந்தாகவும், அப்பெண்ணைப் பார்த்து காலஞ்சென்றவர் திருப்தி கூறியிருந்ததாகவும், திடீரென தரகர் வந்து இத்திருமணம் நடப்பது சாத்தியமில்லைஎனக் கூறியதால் மனமுடைந்த காலஞ்சென்றவர் அளவுக்கதிகமாக மது அருந்திவிட்டு அதனுடன் நஞ்சையும் அருந்தியதாக விசாரணையில் தெரிய வந்தது.

விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. (86)

## வங்கியில் நிவாரணம்

(மானிப்பாய்)

காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையில் மீளக்குடியமர்தல் நிவாரணப்பணம் ஆயிரம் ரூபா பின்வரும் நாட்களில் வழங்கப்படும்.

இன்று திங்கட்கிழமை பன்னுலை, நகுலேஸ்வரம் பகுதிகளுக்கும். நாளை குரும்பசிட்டிக்கும், நாளை மறுதினம் பலாலி மேற்கு பகுதிக்கும், 29ம் திகதிஅளவெட்டி வடக்கு பகுதிக்கும் வழங்கப்படும்.

முன்பு ஆயிரம் ரூபா பெற்றுக் கொண்டவர்களுக்கு மாத்திரம் இப்பணம் வழங்கப்படும்.

## நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)


உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சார்ந்த கிழ் கண்ட பகுதி விண்ணப்பதாரர்களின் இரண்டாம் கட்ட மீளக்குடியமர்வு நிவாரணக் கொடுப்பனவு ரூபா 1000/- யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையில் ஏப்ரல் மாதம் 7ம், 8ஆம், 9ம் திகதிகளில் வழங்கப்படும்

ஏழாம் திகதி ஏழாலை தெற்குப் பகுதிக்கும், எட்டாம் திகதி ஏழாலை மேற்குப் பகுதிக்கும், ஒன்பதாம் திகதி புன்னலைக்கட்டுவன் பகுதிக்கும் வழங்கப்படும்

இதுவரை நிவாரணப்பணம் பெற்றுக்கொள்ளத் தவறிய வேறு பகுதி விண்ணப்பதாரர்களும், இததினங்களில் தமது நிவாரணப்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் குடும்ப பதிவு அட்டை தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர் வழங்கிய தொடர் இலக்கம், ரூபா 2/- முத்திரை என்பவற்றுடன் குறிப்பிட்ட திகதிகளில் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிச் கிளையில் சமுகம் அளித்து, தமது நிவாரணப் பணத்தைப் பெறறுக்கொள்ளலாம்.

# இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்திய கலாநிதி சிவபாதசுந்தரம் நினைவுப்பேருரை

[காலஞ்சென்ற வைத்திய கலாநிதி அருணுசலம் சிவபாதசுந்தரம் அவர்களின் ஞாபகார்த்தப் பேருரை, யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று டாக்டர் வி. கிருஷ்ணராஜாவினுல் வழங்கப்படுகிறது.]



1987 ஐப்பசி இருபத்திரண்டாம் திகதி முழுநாளும் ஊரடங்குச் சட்டம். உக்கிரமான 'ஷெல்' குண்டுத் தாக்குதல் வேறு. யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியின் நிருவாகக் கட்டடத்தில் அகப்பட்டு இருந்தோர் அநேகர். அவர்களின் உயிர்காக்கமுயன்ற டாக்டர் அ. சிவபாதசுந்தரமும் தம்முயிரையே அத்தருணம் இழத்தார்.

இவரின் பெயரை என்றும் நினைவுகூருமுகமாக யாழ் பல்கலைக்கழகத்தில் 'வைத்திய கலாநிதி அருணுசலம் சிவபாதசுந்தரம ஞாபகார்த்தப் பேருரை' வருடாவருடம் நிகழ்த்த இவரின் வைத்திய கலாநிதி நண்பர்கள் விழைந்தனர். இம்முயற்சி கைகூடி ரூ 50,000 பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பட்டது. அன்னுர் இத்தொகையை முதலீடு செய்து கிடைக்கும் வருமானத்தில் வருடாவருடம் ஞாபகார்த்தப் பேருரை ஒழுங்கு செய்யும் பொறுப்பை மனமுவர்ந்து ஏற்றுக்கொண்டனர்.

முதலாவது ஞாபகார்த்தப் பேருரையைநண்பர்கள் முன்வந்து மிகுதிப் பணமிட்டு, 1990, மார்ச் இருபத்தாரும் திகதியாகிய இன்று நடத்துகிருர்கள்.

வைத்திய கலாநிதி வே. கிருஷ்ணராஜா, F. R. C S. (Eng), F. R. C. S. (Edin) அவர்கள் ''வடமாகாணத்தில் புற்றுநோய் சம்பந்தமான காரணிகள்'' என்ற விடயம் பற்றி தனது ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களை பேருரையாக வழங்குவார். வடமாகாணத்தில் தெற்கிலும்பார்க்க ஐந்து மடங்கு புற்றுநோய் ஏற்படுகின்றது என இலங்கை வைத்திய சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையே வைத்திய கலாநிதி வே. கிருஷ்ணராஜாவை ஆய்வுசெய்யத் தூண்டிற்று. யாழ் போதனுவைத்தியசாலை வைத்தியர்களினதும் மருத்துவ மாணவர்களினதும் ஒத்துழைப்புடன் இருவருடம் ஒன்பது மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளையும் புற்றுநோய் ஏற்படும் விகிதத்தைக் குறைக்க மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளையும் பற்றி விபரிப்பார்.

## ஜி.ஸி. ஈ. [சாதாரண தரம்] பரீட்சார்த்திகளின் கவனத்துக்கு!

(உடுவில்)

இம்மாதம் 30-ம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது அடையாளத்தினை உறுதி செய்யும் போது தபால் திணைக்களத்கால் அல்லது ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைப் பாவிக்கலாம்.

இவற்றைச் சமர்ப்பிக்கமுடியாதவர்கள் தமது இருபுகைப் படங்களை உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்கலாம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளினுல் இரு புகைப்படங்களில் கிராமசேவையாளர், உதவி அரச அதிபர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்டு, யாழ். கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் இரு புகைப்படங்களில் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அந்தந்தக் கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட புகைப் படங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் புகைப்படங்களை கல்வி அலுவலகங்களுக்கு எடுத்துவராமல் அதிபரே அவற்றைஒன்று திரட்டி, உதவிப் பணிப்பாளரிடம் கொடுத்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி அறிவுரை கூறியுள்ளார். (109)

## இரு மாடிக் கட்டிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திற்கு 8 லட்சம் ரூபா செலவில் இரு மாடிக் கட்டிடம் கட்டுவதறகு கல்விப் பகுதியினர் நிதி ஒதுக்கியுள்ளனர். இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

கிரிக்கெட்:

# யாழ். இந்து ஆசிரிய அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகத்திற்கும், யாழ் பல்கலைக் கழக ஆசிரியர் அணிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ 20 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்து ஆசிரியர் கழக அணி 22 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து ஆசிரியர் கழக அணி 19 ஓவர்களில் 73 ஓட்டங்களை பெற்றது. ரி. சிவகுமாரன் 34 ஓட்டங்களையும், எஸ். ஸ்ரீகாந்தா 10 ஓட்டங்களையும் பெற்றனர். எதிர்த்துப் பந்து வீசிய கே. முரளி 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், எஸ். அருள்வேல் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் அணி 9 ஓவர்களில் 51 ஓட்டங்களையே பெற்று ஆட்டமிழந்தது. ஏ. அம்பிக்குமார் 15 ஓட்டங்களையும், எஸ். ராஜேஸ்வரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர் எதிர்த்துப் பந்து வீசிய எஸ். ரட்ணசபாபதி 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், ஏ பாஸ்கரன் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்

பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டிக்கு திரு. மனோரஞ்சன், திரு. வரதராஜன் ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். (சி)

## நினைவில் நின்றவர்



பலராலும், ஏன் குழவி முதற் கிழவர், வரை பற்றுடனும் பத்தியுடனும், ''ஷ்செயமன்'' என அழைக்கப்பட்டவரே அமரர் ஸ்ரீமான் இராமலிங்கம் அப்பாத்துரை அவர்கள், பேச, பழக, இனியவர், பெரிதுசிறிதுஎன்னும் பேதமை பாராட்டாதவர். ஊருக்குழைத்த உத்தமர்; மக்களின் நம்பிக்கைக்கோர் நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்; அவரின் வாழ்க்கையும், வாழ்க்கை நெறிகளும் முன்மாதிரியானவை. அவரின் மறைவு அன்னாரின் குடும்பத்தினருக்கு மாத்திரமன்றி, எம் சமூகத்திற்கோர்பேரிழப்பாகும். அன்னார் சமூகத்திற்குஆற்றியபணிகள் பல. தம் குலதெய்வமாம் அருள்மிகு ஸ்ரீஅரசகேசரி விநாயகர் ஆலய வளர்ச்சிக்கு மூன்னின்று உழைத்த சிவனடியார் திருக்கூட்டத்தை அலங்கரித்த பெருமகன். தர்மகர்த்தாசபையின் கண்ணியமான மூதுறுப்பினர்; அதன் தலைவருங்கூட கிராமசபையின் முதல்வர் பதவிக்கு சிறப்பையளித்து, அரும்பணியாற்றியவர்.

கொழும்பு மாநகரில் ஆங்கிலேய முகாமைத்துவத்தின் கீழ் அன்றிருந்த பாரிய வர்த்தக நிறுவனத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியைச் சிறப்புடன் வகித்துஆங்கில முகாமையாளரின் பாராட்டைப் பெற்றவர். அங்கு வாழ்ந்த காலை கொழும்பிலும், சமய சமூகப் பணிகளில் முன்னின்று தொண்டாற்றி பல்லின மக்களின் மதிப்பைப் பெற்றவர் எப்போதும் எங்கும், எவரையும் மலர்ந்த முகத்துடன் சம்பால் ஈர்த்த தனிச் சிறப்புக்குரியவர். மனிதநேயம் மிக்க ஏழை பங்காளன், தம் பெயருக்கேற்ப ''துரை'' மகனாக வாழ்ந்து தொண்டாற்றி ஆயிரம் பிறை கண்ட பெரியவர். பலர் நினைவில் என்றும் நிற்பவர்.

— த. ந. பஞ்சாட்சரம்.

## திரைப்பட

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வில் இது திரையிடப்பட்ட போது, மிகநீண்டகாலமாக ஓடிச் சாதனையை நிலைநாட்டியது.

சத்யஜித்ரே, 'பதர்பாஞ்சாலி' தொடக்கம், தனது கடைசிப் படமான 'கான சத்ரு' (சமூகத்தின் எதிரி 1989) வரை ஏறக்குறைய 28 கதைத் திரைப்படங்களை உருவாக்கியுள்ளார், ''வாழ்க்கையை இத்தனை வெகு நெருக்கத்தில் காட்டுகிற ஒரே வடிவம் சினிமாதான்'' என்பதை ரே தனது ஒவ்வொரு திரைப்படங்களிலும் நிரூபித்துக் காட்டியுள்ளார். 'பதர் பாஞ்சாலி'யைத்தொடர்ந்து, ரே தயாரித்த 'அபராஜிரோ (1956) 'அபுசன்ஸார்' (1959) ஆகிய திரைப்படங்கள் 'அபு முத்தொடர்' என்று அழைக்கப்படுகிறது. இம்முத்தொடர் உலகத் திரைப்படக் கலைக்கான சத்யஜித்ரேயின் பங்களிப்பாகக் கணிக்கப்படுகிறது திரைப்படமென்ற கலையூடகத்தினூடே ரே வெளிப்படுத்திய கலாமேதமைக்காக அவருக்கு அகிலஇந்திய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் மிகச் சிறந்த கௌரவங்கள் கிடைத்துள்ளன. இந்திய அரசு தனது அதி உயர் விருதுகளான 'பத்மவிபூஷன்' பத்மபூஷன்' தாதா ஸாஹேப் பால்கி விருது ஆகியவற்றை அளித்துள்ளது. ஆறு இந்தியப் பல்கலைக் கழகங்கள் இவருக்குச் சிறப்புக் கலாநிதிப் பட்டங்களை வழங்கியுள்ளன ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் இதுவரை இரண்டே இரண்டு திரைப்பட நெறியாளர்களுக்கே கலாநிதிப்பட்டம் அளித்துள்ளது. இதில் ஒருவர் சத்யஜித்ரே. மற்றவர் சார்ளி சப்ளின். ''கடைசி அரை நூற்றாண்டின் அதி உயர் திரைப்பட நெறியாளர்'' என்றபுகழை. 1975-ல் ''பிரித்தானியத் திரைப்படக் கழகம்'' இவருக்குச் சூட்டியது. மொஸ்கோவில் நடைபெற்ற திரைப்பட விழாவொன்றின் போது 'எல்லாக்காலங்களுக்குமான ஒன்பது மகத்தான திரைப்படக் கலைஞர்களுள் ரேயும் ஒருவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. கடந்த வருடம் பிரான்ஸின் ஜனாதிபதி கல்கத்தாவிற்கு நேரடியாக விஜயம் செய்து அந்த நாட்டின் அதி உயர் விருதான Legion d, Honour ஐ அளித்தமை குறிப்பிடத்தக்கது.

கீழைநாடுகள் எல்லாம் கலாசாரப் பாலைவனமானவை என்று மேலைநாட்டினர் கற்பனை செய்த காலமொன்றிருந்தது. அந்த நிலையை மாற்றி, கீழை நாட்டுக் கலை கலாசாரங்கள் எந்தவிதத்திலும் மேலைநாட்டு கலை கலாசாரங்களுக்குக் குறைந்ததல்ல இன்னும் சில விஷயங்களில் அவை உயர்வானவை என்பதை முதலில் நிரூபித்துக் காட்டியவர் கலாநிதி ஆனந்தக்குமாரசாமி. அதை மேலும் சத்யஜித்ரே தமது கலைப் படைப்புக்கள் மூலம் ஊர்ஜிதப்படுத்தி வருகின்றார்.

சசி. கிருஷ்ணமூர்த்தி

## அராலி இந்து: 3 குழுக்களில் முதலிடம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த உடற்பயிற்சிப்போட்டி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு சி. டாஸ் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் அராலி இந்துக் கல்லூரி மூன்று குழுக்களில் முதலிடங்களைப்பெற்றது.

இப்போட்டியில் முதலிடம் பெற்ற பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு: 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு: அராலி சரஸ்வதி ம வி, 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு: வட்டு. இந்துக் கல்லூரி, 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு; அராலி இந்துக் கல்லூரி, 17 வயதுக்குட்பட்ட பெண்கள்பிரிவு: அராலி இந்துக் கல்லூரி, 19 வயதுக் குட்பட்ட ஆண்கள் பிரிவு: அராலி இந்துக்கல்லூரி, 19வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு: வட்டு இந்துக் கல்லூரி. (139)

## குருவுக்கு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றங்களே. ஆகம முறையாக அமைந்ததும் இன்றைய சூல்நிலையிலும் நித்திய நைமித்தியங்கள்தவறாது நடைபெற்று வருவதுமான பொன்னம்பலவாணேசர்கோவில் குருவை கௌரவிப்பது எம்மை நாமே உயர்த்திக் கொள்ளவதாக அமையும்.''

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம் பாராட்டுரை வழங்குகையில் கூறியதாவது

''பிறமதத்தவர்கள் தம் குருவுக்கு அளிக்கும் மதிப்பை சைவமக்கள் தம் குருவுக்கு கொடுக்கத்தவறுவது பெரும் குறைபாடாகும். வேதநெறி தழைத்தோங்கச் செய்யும் சமயம் இந்துசமயம். வாழ்க அந்தணர் எனக்கூறி சகல உயிர்களுக்கும் முதலாக அந்தணர் போற்றப்படுகின்றனர். ஏனைய மக்களுக்கு வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் அந்தணர்கள். எமது சமூகம் எதிர்காலத்திலாவது நம்குருவுக்கு கொடுக்க வேண்டிய மதிப்பையும், கௌரவத்தையும் வழங்க முன்வரவேண்டும்.

''சேர். பொன்னம்பலம் இராமநாதன் எந்த நோக்கத்துடன் கோவிலை ஆரம்பித்தாரோ அந்தநோக்கை நிறைவேற்றும் பணியில் தன்னை முழுதாக அர்ப்பணித்துக் கொண்டகுருக்களை பாராட்டாது விடின் எமது கடமைகளில் இருந்து நாம் தவறியவர்களாவோம்''.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தமது பாராட்டுரையில், ''ஒரு சில பிரபல சிவாச்சாரியர்களைத் தவிர ஏனையோர் பல இன்னல்களையும் பொருளாதாரக் கஷ்டங்களையும் எதிர்நோக்கியுள்ளனர். போதிய பொருளாதார வாய்ப்பின்மையால் இளம் சிவாசாரியர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலையில் உள்ளனர். இருப்பினும் எமது நாட்டுக் கோவில்களைப் பாதுகாப்பதும் நமது கடமையாகும் சிவாசாரியர்களை மேன்மைப்படுத்தவும், அவர்களின் பெருமைகளை உணரவைக்கவும் நாம் நடந்து கொள்ளவேண்டும். சிவாச்சாரியார்களும் கூட தனிய கோவில் ஊழியர்களாக மட்டும் அமையாது கிராமத்து மக்களின் நலன் பேணும் சேவகர்களகவும் பணியாற்ற வேண்டும்'' என்றார்.

சிவானந்த குருகுலத் தலைவர் சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள், சிவஸ்ரீ சஞ்சிதபாதக் குருக்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (109)

## புதிய நிர்வாகிகள்

(தென்மராட்சி)

நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் அதிபர் திரு. மா. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு மா. சிதம்பரநாதன், செயலாளர்: சி. ஏகாம்பரநாதன், உப-செயலாளர்: க. வேலுப்பிள்ளை, பொருளாளர் திருமதி அன்னலட்சுமி சண்முகதாஸ். 7 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

oooo

(தென்மராட்சி)

சங்கத்தானை சாரதா சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. நாகராசா, உப-தலைவர்: என். ரி. பூபாலசிங்கம், செயலாளர்; செ. சுப்பிரமணியம், உப-செயலாளர் நா. மகேந்திரன், பொருளாளர்: க. பாலசுந்தரம், இரு நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

oooo

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு இந்து இளைஞர் மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்: செல்வன் பா. கணேசமூர்த்தி, உப-தலைவர்கள்: செல்விகள் ஐ. ரேணுகா, சு. பிரிந்தா, செயலாளர்: செல்வன் சு. பிரமேந்திரன், உப-செயலாளர்: செல்வி செ. கவிதா, பொருளாளர்; செல்வி கு. நளினி, உப-பொருளாளர்: செல்வன் த. தயாபரன், செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப் பேர் தெரிவு செயப்பட்டுள்ளனர். (54)

oooo

(யாழ்ப்பாணம்)

இருபாலை மாண்டக்குளப்பதி அருள்மிகு அம்பாள் தேவஸ்தானம் கோவிலில் வழிபாடுவோர் அடங்கிய பொதுக்கூட்டம் அண்மையில் ஆலய மண்டபத்தில்அதிபர் வி. செல்லப்பா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஆ. சுப்பிரமணியம், செயலாளர்: க. மயில்வானம், பொருளாளர்: இ. சத்தியநாதன், உப-தலைவர் வி. செல்லப்பா, உதவிச் செயலாளர்: க நித்தியராசா, மேலும் பத்துபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

oooo

(உடுவில்)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வை. யோகீஸ்வரன், உப-தலைவர்கள் இ. சச்சிதானந்தம், வி. எஸ். சிவபாலசிங்கம், செயலாளர்: வி. பரிபூரணானந்தசர்மா, உப-செயலாளர் மா. கணேசமூர்த்தி, பொருளாளர்: இ. தருமானந்தம், கணக்குப் பரிசோதகர்: த. மாணிக்கவாசகர். நிர்வாகசபை உறுப்பினர்கள் 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (109)

oooo

(மட்டுவில்)

பெருங்குளம் பாரதி படிப்பகத்தின் புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: ஏ. ரி. சகாயம், செயலாளர்: எம். ஸ்ரீபாஸ்கரன், பொருளாளர்: எம். குபேந்திரன், துணைத் தலைவர்;

## பொன் விழா போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

அராலி தெற்கு ஸ்ரீமுருகன் சன சமூக நிலையத்தின் பொன் விழா எதிர்வரும் தமிழ்ப் புதுவருடப் பிறப்பு தினத்தன்று நடைபெறவுள்ளது.

இவ் விழாவை முன்னிட்டு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களுக்கிடையில் நாடகப் போட்டியொன்று அடுத்த மாதம் 12ம் திகதியன்று நடாத்தப்படவுள்ளது.

மறுநாள் 13ம் திகதியன்று சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, ஆகிய பல்வேறு போட்டிகள் நடைபெறவுள்ளது புதுவருடப் பிறப்பு தினத்தன்று இரவு கலை நிகழ்ச்சிகள், பரிசில் வழங்கல், பொன் விழா மலர் வெளியீடு என்பன இடம்பெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

## வீதி திருத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

நீண்ட காலமாகக் குன்றும் குழியுமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்த பருத்தித்துறை கிராமக்கோடு-வராத்துப்பளை வீதி திருத்திப் புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வீதி நீண்டகாலமாகக் கவனிப்பாரற்றுக் கிடப்பதனால் இவ்வீதியால் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் வாகனங்கள் பலத்த இன்னல்களை அனுபவிதது வந்ததுடன் அடிக்கடி விபத்துக்களுக்கும் உள்ளாகி வருவதால் உடனடியாக இவ்வீதியைத்திருத்திபுனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வராத்துப்பளை சனசமூக நிலையம்வீதிகள் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரைஅவசரமாகக் கேட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (52)

## யாருடையது?

மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த திரு. நடராசா மகாலிங்கம் என்பவரின் அடையாள அட்டையும் வேறுசில பொருள்களும், கே. கே. எஸ். வீதியில உள்ள பத்மா கபே உரிமையாளர் ஐ. குணரத்தினத்தால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஸ்ரீகாந்தன், துணைச் செயலாளர்: ஆர். யோகநாதன்.

oooo

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்விநிலைய ஒன்றிய பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொ. ஐங்கரநேசன், செயலாளர்: ரி. எஸ். சிவமோகன். பொருளாளர்: பி. நாகநாதன், உப-தலைவர்: எம். மரியதாஸ், உப-செயலாளர்; எம். ஜெயந்தன், கணக்காய்வாளர்: ரி. லோகநாதன்.

oooo

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது புதிய நிர்வாகிகள்வருமாறு:

தலைவர்: மு. இராமலிங்கம், உப-தலைவர்கள்: கலாநிதி க. மோகனதாஸ், டாக்டர் க விக்கினேஸ்வரன், செயலாளர்: திரு. பொ. தர்மேந்திரன், உப-செயலாளர்: ஏ. ஜெயகுமார் தனாதிகாரி: சு. சண்முகநாதன் 15 பேர் நிர்வாகக்குழு அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

# முறைசாராக் கல்வித்திட்டம் 2400 பேருக்கு பயிற்சி

(உடுவில்)

முறைசாரக் கல்வித்திட்டத்தின் கீழ் இவ்வருடம் புதிதாக பத்திரிகைத்துறை, கட்புல சாதனங்கள் தயாரித்தல்; தொலைக்காட்சிப் பெட்டிகள் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

எட்டுமாதகாலத்துக்கு இப் பயிற்சிகள் வழங்கப்பட்டு திணைக்கள சான்றிதழ்களும் வழங்கப்படஉள்ளன. இத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் சுமார் 2400 பேர் பயிற்சி அளிக்கப் படவுள்ளனர். முப்பது பாடசாலைகளில் அறுபது பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகளை வழங்குவதற்கென ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் பத்து லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை முறைசாராக் கல்விப்பிரிவினருக்கு வழங்கியுள்ளது. (109)

## யாழ். ரயில் நிலையத்தில்

# வாகன ஒழுங்கு முறை கடைப்பிடிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

''யாழ் புகையிரத நிலையத்தில் ஒழுங்குமுறை இல்லாமல் வாகனங்கள் தரித்துநிற்பதால் பொதுமக்கள் பெரிதும்கஷ்டப் படுகிறார்கள். வாகனங்கள் ஒழுங்கு முறையாகவிடுவதற்கு வாகனச்சொந்தக்காரர்கள்ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.''

இவ்வாறு யாழ். ரயில்நிலைய அதிபர் திரு.இ. மயில்வாகனம் தெரிவித்தார்,

அவர் மேலும் கூறியதாவது இதுபற்றி கொழும்பிலுள்ள மேலிடத்தோடு தொடர்பு கொண்டதாகவும் இதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆவன செய்வதாக அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

யாழ். நகரத்தில்வீதி ஒழுங்கு முறைகளை பராமரிப்பது போன்று புகையிரதநிலையத்திலும், இவ்வொழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்க சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (152)

# பரீட்சையில் புதிய நடைமுறை

(உடுவில்)

''க.பொ.த. சாதாரணதர பரீட்சைகளை நடத்தும் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் நோக்குநர்களும் சொற்ப ஊதியத்தைப் பெறுகின்றனர், அவர்களுக்குக் கூடிய ஊதியம் வழங்குமாறு பலமுறை கேட்டுக்கொண்டும இதுவரை கல்விப் பகுதியினர் அதனைச் செய்யவில்லை.''

இம்மாதம் 30-ம்திகதி ஆரம்பமாகும் க. பொ. த. (சா) பழைய-புதிய திட்ட பரீட்சைகளை நடாத்துகின்ற இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களுக்கான அறிவுறுத்தல்கள் கூட்டத்தில் உரையாற்றியஉதவிப்பரீட்சை ஆணையாளர் திரு. சின்னத்துரை மேற்கண்டவாறு கூறினார்,

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றமேற்படி கூட்டத்துக்கு யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி பெரிய தம்பி தலைமை வகித்தார். உதவிப் பரீட்சை ஆணையாளர் திரு. சின்னத்துரை மேலும் கூறியதாவது;-

''இங்கு கூடியுள்ள நீங்கள் யாவரும் அனுபவம் மிக்கவர்கள். எனினும் புதிதாக நியமனம் பெற்றவர்களும், அனுபவசாலிகளாயினும் மீண்டும் நினைவூட்டவும், பரீட்சைகளில் புதிய நடைமுறைகளைத் தெரியப்படுத்தவுமே இக்கூட்டத்தினை ஒழுங்கு செய்துள்ளோம்.

''நீங்கள் அனுபவசாலிகளாக இருந்தாலும் உங்களுக்கு தரப்படும் கைநூலை கட்டாயமாக வாசியுங்கள்.

''அதிபர்கள் மாணவர்களுடைய அனுமதி அட்டைகளை எக்காரணம் கொண்டும் தம் வசம்வைத்திருக்க வேண்டாம் பரீட்சார்த்திகள் எடுக்கும் பாடங்களில் மாற்றங்கள் இருக்கலாம். மண்டபங்களில் மாற்றம் செய்ய வேண்டி ஏற்படலாம். இவற்றை பரீட்சைக்கு முன்னர் கல்வி திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பர்ட்சார்த்திகள் நிவிர்த்திக்க வேண்டி இருக்கும். எனவே தாமதமில்லாமல் அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை கொடுத்து விடுங்கள். பிரவேச அட்டவணையை அதிபர்கள் பிழையாக நிரப்பி அனுப்புவதனல் தான் அனுமதி அட்டையில் தவறுகள் நேருகின்றன. எனவே சரியான முறையில் அதிபர்கள் விண்ணப்பபடிவங்களை நிரப்பி அனுப்ப வேண்டும்.'' (109)

ஹரன் திரையில்
6-வது வெற்றிவாரமாக
நாயகன்!!!
தினசரி: காலை 10-30, 2-30, மாலை 6-30
★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்
நாயகன்
(கலர்)

# பிரம்மோற்சவ விழா

[உடுவில்]

சரித்திரப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பிரம்மோற்சவ விழா இம் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஏப்பரல் 7ம் திகதி சனிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், ஏப்ரல் 13 ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், ஏப்ரல் 14ம் திகதி சனிக்கிழமை பகல் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணித்து தொடர்ந்து ரதோற்சவம் நடைபெறும்.

உற்சவ கிரியைகளை தேவஸ்தான பிரதானகுரு பிரம்மஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள் நடத்திவைப்பார். [109]

## பாடசாலை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் திரு. கே. பேரம்பலம் அபிவிருத்தி சபையின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடந்து கூறியதாவது: பாடசாலை அபிவிருத்தியில் இரண்டு வகை உண்டு. ஒன்று பௌதீக அபிவிருத்தி. மற்றது மாணவர் சுக வளர்ச்சி அபிவிருத்தி. இவற்றில் ஆசிரியர்களைவிட பெற்றோரின் அக்கறையே அதிகமாக உள்ளது என்றார்.

# இடமாற்றம்

[பருத்தித்துறை]

வவுனியாக் கச்சேரியில் பொதுசன தொடர்புகள் உத்தியோகத்தராகப் பணியாற்றிய திரு. வை. ஆ. சர்மா யாழ்ப்பாணம் கச்சேரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் முன்னர் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றினர். (52)

# இப்படியும் நடக்கிறது

தினசரிப் பத்திரிகைகளைக் கட்டி எழுப்புபவர்கள் யார் தெரியுமா? சாட்சாத் நிருபர்கள்தான். நிருபர்கள் தான் கருப்பொருள். அதனை மெருகூட்டுபவர்கள்தான் பத்திரிகையாளர்கள்.

இந்த நிருபர்கள் அதாவது- செய்தியாளர்கள் சமாச்சாரமே வித்தியாசமானது! ஒரே நிருபர் அதே பெயரில் (சற்றுத் துணிச்சலானவர்) பல பத்திரிகைகளுக்கும் செய்தியாளராக இருப்பதும் உண்டு. அதே நிருபர் பல பெயர்களில், பல பத்திரிகைகளுக்கும் செய்தியாளராக இருப்பதும் உண்டு.

இதனை முறியடித்திருக்கிறார் ஓர் வாசகர். முறியடித்தது மட்டுமல்ல; இரண்டு முனனணித்தினசரிகளுக்கும் 'முடிச்சு' போட்டிருக்கிறார்! சரி கதைக்கு வருவோம்.

'தமிழ் – சிங்கள புதுவருட'த்தை 'தேசிய புதுவருடமாக மாற்ற தாம் முடிவு செய்திருப்பதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அண்மையில் அறிவித்திருந்தார். (நீங்கள் படித்திருந்தீர்களோ தெரியவில்லை).

இதுசம்பந்தமான அவரது செய்தி, இம்மாதம் இருபதாம் திகதி வெளியான 'சன்' ஆங்கிலப் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக இடம்பெற்றிருந்தது.

''வீக்கெண்ட், ஆங்கில வார இதழில் வெளியான ஒரு கடிதத்தை படித்ததும் புல்லரித்தது. அதன் எதிரொலிதான், தேசிய புதுவருடம் பெயர் மாற்றம். தமிழ் – கிங்களப் புதுவருடம் இனிமேல் தேசிய புதுவருடம் என்று அழைக்கப் படும்'' என்று ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்திருந்ததாக 'சன்' தலைப்புச் செய்தி கூறியது.

தகவல் ஒன்று; 'சன்' பத்திரிகையின் சகோதர பத்திரிகை தான் 'வீக்கென்ட்' (வார மலர்). 18-3-90 வீக்கென்டில் வெளியான அதேகடிதம் 'சன்' பத்திரிகையிலும் (20-03-90) வெளிவந்திருந்தது. இருபத்திரிகைகளுக்கும் கடிதங்கள் எழுதியவரும் ஒரே நபர்தான். ஆனல்,'சன்' பத்திரிகையில் வாசகரின்(பெயர்)ஜெறிவித்யசேகர என்றும், 'வீக்கென்டில்' அந்த வாசகரின் பெயர் ஜெறி வைத்தியசேகர என்றும் காணப்பட்டிருந்தது.

மேலதிகத் தகவல் இரண்டு: 'வீக்கென்'டில் கடிதம் எழுதியவரின் விலாசம் கொழும்பு-13 என்று காணப்பட்டது. ஆனல் உண்மையில் அந்த வாசகரின் விலாசம் பொத்துஹர ஆகும். இந்த ஜெறி இருக்கிறாரே... இவர், 'ஐலண்ட்' ஆங்கிலத்தினசரியில் அமிதா அபயசேகர எழுதும பகுதிக்கு அடிக்கடி துப்புக்கொடுப்பவர்!

இரண்டு விலாசங்கள்; பெயரும் வித்தியாசம். பல பத்திரிகைகளுக்கும் எழுதுபவர். எப்படியோ புகுந்து விளையாடி ஜனாதிபதியின் சபாஷையும் பெற்றுவிட்டார்.

'ஊடுருவ'

# மீன்பிடித் தொழிலை பேணிப் பாதுகாப்பது அவசியமாகும்''

## - ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

''தமிழீழத்தில் கடல் விவசாயம், கைத்தொழில் ஆகியன முக்கிய அம்சங்களாக கருதப்படுகின்றன. இதில் மீன்பிடித்தொழில் வளர்ச்சி பிரதானமாகும். இதைப் பேணிப் பாதுகாத்து வருவது எங்கள்ஒவ்வொருவரினதும்கடமையாகும்''.

இவ்வாறு யாழ். மனோகரா தியேட்டரில் நேற்று நடைபெற்ற மீன்பிடித்தொழிலாளர் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் வலிகாமப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''கடலில் ஆழக்கடல், பரவைக்கடல் என்று இருவகைகள் இருக்கின்றன. எல்லாத் தொழிலும் எல்லா கடல்களிலும் செய்ய முடியாது. மடித்தொழில் செய்வதால் சில பாதிப்புகள் ஏற்படுகின்றன. மீன் கருவளம் அழிக்கப்படுகின்றன. உற்பத்தி குறைவு ஏற்படுகின்றது. இதற்கு மடித்தொழிலை நிறுத்தி கடல் வளத்தை பெருக்க வேண்டும் என்றாலும் இந்தத் துறையிலுள்ளவர்களோடு ஆராய்ந்து மடித்தொழில் என்ன முறையில் செய்ய வேண்டும். அல்லது செய்ய இயலாதா என்பதை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிமுடிவு எடுக்கப்படும்'' என்றார்.

நாவாந்துறை சமூக அபிவிருத்தி அமைப்பைச் சேர்ந்த திரு. ம. அருமைத்துரை பேசுகையில், மடித்தொழில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு வருடத்துக்கு முன்புதான் அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் இதனல் பறிக்கூடுகள். களங்கண்டி செய்பவர்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள் என்றும் களங்கண்டி வலைகள் பறிக்கூடுகள் மடித்தொழிலால் சின்னபின்னப் படுத்தப்படுகின்றன என்றும் கூறினர். (152)

## பேசாலை

# கொத்தணி பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி

(மன்னார்)

பேசாலைக் கொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டிகள் பேசாலை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன. 9 பாடசாலைகள் கலந்து கொண்ட இப் போட்டிக்கு கொத்தணி அதிபர் திரு. ஏ. ஆர். சிறில் தலைமை தலைமை வகித்தார்.

பிரதம அதிதியாக மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. ரி. சுந்தரலிங்கமும், பிரதம கல்வி அதிகாரி சற். ஏ. ரகீமும், மாவட்ட உடல் கல்வி அதிகாரி எம். எஸ்.ஏ. சருன், சிறப்பு விருந்தினராக உதவிக் கட்டளைக்குரவர் அருட்திரு எல். எஸ். குருஸ், மன்னார்ப் பகுதி விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் லக்ஷ்மன் பத்மநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதம கல்வி அதிகாரி ஜனப் சற். ஏ. ரகீம் பரிசில்களை வழங்கினர். முதலாமிடத்தை பத்திமா மகா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை தலைமன்னார் பியர் அ. த. க. பாடசாலையும், மூன்றாம்இடத்தைபுனிதலோறன்ஸ் பாடசாலையும்பெற்றுக்கொண்டன.

## கிராம

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ராயர், திரு ரேக் சூசைப் பிள்ளை ஆகியோரும் உரையாற்றினர். திரு. டிலான் நன்றி கூறினர். (72)

# எரிபொருள் பாவனையாளர் கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலியிலுள்ள எரிபொருள்கள் விற்பனை நிலையத்தின் செயற்பாட்டு நேரத்தை நீடிக்கவேண்டும் என்று பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோப்பாய்க்கும் -நெல்லியடிக்கும் இடையே உள்ள நீண்ட தூர இடைவெளியில் அச்சுவேலியில் மட்டும்தான் எரிபொருள்கள் நிரப்பும் நிலையம் உள்ளது என்றும் இது பிற்கல் ஆறுமணியுடன் மூடப்படுவதால இரவு வேளையில் வாகனச்சொந்தக்காரர்கள் எரிபொருள்களை பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர் என அக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நிலைமை சீரடைந்து இரவு வேளையிலும் வாகன போக்குவரத்தும் வியாபார நிலையங்களின் சேவையும் தொடரும் இந்த நேரத்தில் எரிபொருள்கள் நிரப்பு நிலையத்தின் செயற்பாட்டு நேரத்தை மேலும் நீடித்து பாவனையாளர்களுக்கு வசதி செய்யவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

# சாதி வேற்றுமை உள்ள நாட்டில் சமூக ஒற்றுமையைப் பெறமுடியாது - தினேஷ்

(மட்டுவில்)

''சாதிவேற்றுமை வேரூன்றியிருக்கும் ஒரு நாட்டிலே ஒருபோதும் சமூக ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் பெறமுடியாது. சாதி வேற்றுமையால் பீடிக்கப்பட்டிருக்கும் நாடு அரசியல் துறையிலோ, பொருளாதாரத்துறையிலோ அன்றி வேறெந்தத் துறையிலோ முன்னேற்றமடையமுடியாது. தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் திரு. ப. தினேஷ் இப்பகுதி விழிப்புக் குழுவினர்களை அழைத்து, விழிப்புக்குழுவின் நடைமுறைகளை விளக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வைபவத்தில் அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பாவும் உடனிருந்தார். அமைப்பாளர் திரு. தினேஷ் மேலும் கூறியதாவது:

தமிழீழ நாட்டில் வாழும் ஒரே இனம் தமிழினம். நமது மத்தியிலுள்ள தமிழ்மக்களான எல்லா மக்களுக்கும், எல்லா உரிமைகளும் எதுவிதபாகுபாடுமின்றி வழங்கப்படவேண்டும்

அப்பொழுதுதான் எமது மத்தியிலே மனிதாபிமானம். பண்பாடு, ஒழுக்கம் வளர்ந்துள்ளதாகக் கூறமுடியும்.

சாதிவேற்றுமை வேரூன்றியிருக்கும் ஒரு சமூதாயத்திலே சகோதரத்துவம், மனிதாபிமானம் என்றுமே தலைதூக்க முடியாது.

சாதிமதபேதமற்ற ஒரு பண்பான இனத்தை உருவாக்குவதே உங்கள் கடமையாகும் என்று கூறினார்.

தொடர்ந்து அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா பேசுகையில்;

இன்று தென்மராட்சிப் பிரிவிலிருந்து ஒரு கலந்துரையாடலுக்காக உங்களை நாம் அழைத்ததின் நோக்கம் நீங்கள் இயக்கத்திற்கு காட்டும் ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அறியவும், உங்களை ஊக்குவிக்கவுமேயாகும். குறைகுற்றங்களை நீங்கள் துணிவுடன் எடுத்துக்கூறவேண்டும்.

நீங்கள் ஒழுக்கம், நன்நடத்தை பண்பாட்டுடன் நடந்து மக்களுக்கு முன்னோடிகளாக விளங்க வேண்டுமென்றார். (82)

## மக்களுக்காக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவுக்கூட்டத்தில் லெப்டினட் ராதாவின் தந்தையார் திரு. கனகசபாபதி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நமது பாராளுமன்றஉறுப்பினர்கள் பேச்சுவார்த்தைகள் என்று ஏமாற்றப்பட்டுவிட்டனர். இந்த ஏமாற்றத்தைத் துடைக்கவே எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள். ஆயுதத்தாலும், அஹிம்சையாலும் இந்தியப் படையை நாம் தோற்கடித்துவிட்டோம்'' என்றார்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக்கட்சி உறுப்பினர் திரு. சு. இராசநாயகன் கூறியதாவது ''தமிழர்களில் ஒரு பண்பு இருக்கிறது. உடல், பொருள்கள் தங்களுக்கு இல்லாது போனாலும் அயலவர்களுக்கு கொடுக்கும் பழக்கம் பண்டுதொட்டு இருந்து வருகின்றது. அத்தோடு 'ஆவி'யைக்கூட மற்றவர்களுக்குக் கொடுக்க நம் பூனதுதவர்கள் [illegible] டார்கள் அந்த வழியில் எமது தமிழீழ இளைஞர்களுக்காக மக்களுக்காக தன் ஆவியை ஈந்தார் அன்னை பூபதி அவரை எம்மால் மறக்கமுடியுமா?

''அவர் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார் ஒன்று கொலையை நிறுத்துங்கள் இரண்டாவது போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்துங்கள். இரண்டுக்குமே இந்திய அரசு செவிசாய்க்காததினால் இந்த இழப்புக்களை நாம் அனுபவிக்க வேண்டிவந்தது. காந்தி பிறந்த நாடு அஹிம்சையை மதித்திருந்தால் அன்னை பூபதி அமரத்துவம் அடைந்திருக்கமாட்டார்'' என்றார்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் அன்னை பூபதிக்கு 2 நிமிட நேர மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது. [154]

## ஏகமனதாகத் தெரிவு

(வேலணை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், டாக்டர் ஆர். தெய்வேந்திரம் தலைமையில் யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில் நடைபெற்றது. சங்கத்தின் தலைவராக மீண்டும் டாக்டர் ஆர். தெய்வேந்திரம் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## வல்வையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பறை ஒலிக்க, வல்வை மக்கள் கதறி அழுதநிலையில் நெடியகாடு, ஊறணி, வல்வெட்டி, உடுப்பிட்டி, இமையாணன், ஊரிக்காடு, மயிலியதனை போன்ற வீதிகளூடாக எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் வல்வைச் சந்திக்குக் கொண்டு வரப்பட்டு, இரவு 7-00 மணியளவில் கொடும்பாவிகளுக்குத் தீ மூட்டப்பட்டது.

பின்னர், வல்வை மக்களால் பொங்கல், அன்னதான வைபவங்கள் நடாத்தப்பட்டன

இதைத் தொடர்ந்து இரவு. திரு. எஸ். மகேந்திரன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. (51)

## வடக்கு, கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

1987-ம் ஆண்டின் மாகாணசபைகள் சட்டத்தின் 42-ம் பிரிவு 31-ம் ஷரத்தின் பிரகாரம் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட முதலமைச்சர், மாகாணசபை அமைச்சர்கள், பிரதம செயலாளர் ஆகியோர் சேவைக்கு வரத்தவறியிருப்பதனாலும், செயற்படத் தவறி இருப்பதனாலும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிர்வாகமும், செயற்பாடும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று தாம் திருப்தி கொண்டுள்ளதனால் ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தரவில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1987ம் ஆண்டு 42 ம் இலக்க மாகாண சபை 31வது ஷரத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட முதலமைச்சர். மாகாண சபை அமைச்சர்கள், பிரதம செயலாளர் ஆகியோர் சேவைக்கு வரத்தவறி இருப்பதனாலும், செயல்படாது இருப்பதனாலும் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் நிர்வாசமும், செயற்பாடும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று நான் உணர்ந்திருக்கிறேன். எனவே உத்தியோகத்தர்களைப் பதவி நீக்கம் செய்து, அவர்களுக்குப் பதிலாக வேறு நபர்களை நியமிப்பது அவசியமாகிறது.

இந்த விவகாரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சரது ஒப்புதலைப் பெறமுடியாது இருக்கிறது.

எனவே அரசாங்க யாப்பில் 154 சி பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வேலுப்பிள்ளை நடராஜா சிவராஜாவை வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் சொர்ணலிங்கம் கணேசநாதனை அந்தப் பதவிக்கு நியமிப்பதற்கும் உத்தரவிடுகின்றேன்

அவ்வாறு அவசியம் ஏற்படும் பட்சத்தில், மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உத்தியோகஸ்தர்களைப் பதவி நீங்குவதற்கும் நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரைப் பணிக்கின்றேன். இவ்வாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிபந்தனையற்ற

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்,

இந்தியாவுடன் கலந்தாலோசித்து பல பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியுள்ளது, பிரதமர் திரு. வி. சிங்கின் அரசாங்கம் இலங்கையின் நம்பிக்கைக்குரிய அரசாங்கமாக விளங்குகின்றது.

இந்தியப் பிரதமர் அண்மையில் வெளியிட்டகொள்கை அறிக்கையில், இலங்கையிஸ் இறைமை, பிரதேச கௌரவம், ஐக்கியம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ளதென்றும், அவற்றை அது பேணிக் காக்கும் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்திய மண்ணிலிருந்து இலங்கை மீது தாக்குதல் நடாத்த எந்த ஒரு தீவிரவாத குழுவுக்கும் இந்தியா இடமளிக்கமாட்டாது. இந்தியப்படை மார்ச் மாதம் 31-ம் திகதிக்கு முன்னர் முற்றாக வாபஸ் பெற்றமைக்கு எனது மரியாதையையும், பாராட்டுகளையும் இந்திய அரசுக்கும், இந்திய மக்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதை இந்தியாவின் புதிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையில் வாழும் சகல மக்களையும் நியாயமாக நடத்துவதும் இலங்கை அரசின் பொறுப்பு என்பதையும் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது.

மற்றொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவது பிழையான காரியம் என்பதை இந்திய அரசாங்கம் செயல் முறையில் எடுத்துக்காட்டியுள்ளது.

இன்று முதல் இந்தியாவுடனான நட்புறவு மேலும் பலப்பட்டுள்ளது. எந்தவொரு நாட்டின் உதவி கோரப்பட்டாலும் அது சம அடிப்படையில் அமைந்திருக்கும்

சகல தேசிய உள்நாட்டுக் கொள்கைகளும் இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்கும் நீதியின் அடிப்படையில் கொள்கைகள் அமையுமேயொழிய, இன, மத ரீதியிலான கொள்கைகளுக்கு இனி இடமேயில்லை. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81

# உள்ளூராட்சி தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விரைவில் நடாத்தப்படவுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாநகரசபைகள், நகரசபைகள், கிராமசபைகளுக்கான தேர்தல்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், இதற்கான சட்ட விதிகள் ஏற்கனவே அரச வர்த்தமானியில் வெளியாகியுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில், இத்தேர்தல்களை நடாத்த வகைசெய்யும் சட்ட விதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அதனையடுத்து தேர்தல்கள் நடாத்துவதற்கான திகதி வெளியிடப்படும் என்றும் அரசாங்கம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

# மண்வெட்டிகள் வழங்குவதில் பாரபட்சம்!

(நாவற்குழி)

''இலவச மண்வெட்டிகள் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது'' என்று கோயிலாக்கண்டி கிராம முன்னேற்றச் சங்கம் யாழ்ப்பாணம் கமநலச்சேவைகள் உதவி ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்திற்கு உட்பட்ட பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக மண்வெட்டி வழங்கப்பட்டபோதிலும் இதுவரை கைதடி கமநலச்சேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு இலவச மண்வெட்டி வழங்கப்படவில்லை. இது ஒரு பாரபட்சமான முறை என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாகச் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (107)

## பாடத் திட்டத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளதாவது;

கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தில் வரலாறு மூடிமறைக்கப்பட்டு இலங்கையின் வரலாறு சிங்கள மக்களின் வரலாறுதான்; பௌத்த மதத்தின் வரலாறுதான் தான் என்ற தோரணையில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்களினதும் இந்து இஸ்லாமிய மதங்களினதும் உண்மையான வரலாறு மூடி மறைக்கப்பட்டுள்ளது. அல்லது வரலாறு தெரியாதவர்களினால் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது

சேர். பொன். அருணாசலம், சேர். முத்துக்குமாரசாமி போன்றோர் ஆற்றிய பங்களிப்பு முற்றாக மறைக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய படையெடுப்பின்போது இலங்கையில் காணப்பட்ட மூன்று இராச்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

சிங்கள, தமிழர்களின் கலாசார உறவுகள், பரிவர்த்தனைகள் வரலாற்றுப் பாடத்தில் உரிய முறையில் கூறப்படவில்லை. மாறாக, இனங்களிடையே கசப்பு உணர்வுகள் மாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

தென்னிந்தியா பற்றிக் கூறும்போதெல்லாம் ஆக்கிரமிப்பாளர் என்ற சொற்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் தொடர்பாக மகாவம்சம் கூறுகின்ற கட்டுக்கதைகள் மாத்திரம் கூறப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வரலாற்றுச் சிறப்புக்கள் முற்றாக மறைக்கப்பட்டுள்ளன; திரிக்கப்பட்டுள்ளன.

பல முரண்பாடுகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட வரலாற்றுப் பாடத்தில் புகுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ் மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதற்கு இந்நூலைப் பயன்படுத்துவது தடுக்கப்படவேண்டும். சரித்திர வரலாறுகளை எழுதுப் குழுவில், தமிழ் வரலாற்றுப் பேராசிரியர்களையும், தமிழ் ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் அனுப்பிவைத்துள்ள இம்மகஜரின் பிரதிகள், கல்வித் திட்டத்துடன் தொடர்பான அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

## கல்லூரி சுற்றுமதில் கட்ட ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக்கல்லூரி மாணவர் மன்றம் மேற்கொண்ட முயற்சியினால் கல்லூரி வளவைச் சுற்றி மதில் கட்டப்பட்டு வருகின்றது.

முன்னர் பாதுகாப்பின்மையால் கல்லூரி வளவில் மூலிகைச் செடிகளையும், ஆயுள்வேத மருத்துவத்திற்குதேவையான மருந்து மரங்களையும் வளர்க்க முடியாதிருந்ததென்றும் தற்போது மதில்கட்டப்படுவதால் கட்டாக்காலி ஆடுமாடுகளிலிருந்து பாதுகாப்பாக இந்த மூலிகைச் செடிகளையும், மரங்களையும் வளர்க்கக் கூடியதாக இருக்கும் என்றும் கல்லூரியின் உப-அதிபர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார். (72)

## மன்னாரில் ஜப்பான் அதிகாரிகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்துக்கு ஜப்பான் தூதரக உயர் அதிகாரிகளான டாக்டர் ஏ கொபட்டா, திரு. கிரேகியுகி கொபட்டா ஆகியோர் வருகை தந்து மாவட்டத்தில் பாதிப்புற்ற கிராமங்களை சுற்றி பார்வையிட்டனர்.

இவர்களுடன் அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. சபாநாயகம், புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர், திரு. கே. கணேஸ், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் ஆகியோர் சென்றனர்.

வன்செயலால் சேதமாக்கப்பட்ட அடம்பன் வைத்தியசாலையைபார்வையிட்டு அதனை மீளத் திருத்துவதற்கு ஒரு கோடியே 90 லட்சம் ரூபா வழங்க அனுமதி வழங்குவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## தீயில் கருகி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் 77 பேர் தீக்காயங்களுக்குள்ளானார்கள்.

கேரளா, மாநிலத்தின் மலன்னு என்னுமிடத்தில் நிகழ்ந்த இக்கோர விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் இனம்காண முடியாதபடி உருக்குலைந்துள்ளன. (அ)